விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 313 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 11 சனிக்கிழமை (28.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## இறுதி யுத்தத்தின்போது
# சரணடைந்தவர்களின் பட்டியலை ஒப்படைக்குக



### சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம்

(ஜெனிவா)

இறுதி யுத்தத்தின்போது இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்களின் பட்டியலை ஒப்படைக்குமாறு சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம் வலியுறுத்தியுள்ளது.

(05ஆம் பக்கம் பார்க்க)

## உயர்தர பரீட்சையை ஒத்தி வைக்குக
### நீதிமன்றில் மனு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் 4ஆம் திகதி நடைபெறவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சையை மேலும் ஒத்திவைத்து உத்தரவிடுமாறு கோரி மாணவர்கள் குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பில் ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க கல்வி அமைச்சர் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு உயர் நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியுள்ளது.

இது தொடர்பான மனு நேற்று முர்து பெர்னாண்டோ, குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் பிரியந்த பெரனாண்டோ ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் அழைக் 15

## மின்சாரம் தாக்கியதில் குருக்கள் உயிரிழப்பு
### துணுக்காயில் சம்பவம்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துணுக்காய் விநாயகர்புரம் பகுதியில் நேற்றுக் காலை மின்சாரம் தாக்கி குருக்கள் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

வீட்டு காணியினுள் விதைக்கப்பட்டிருந்த நெல்லுக்கு தண்ணீர் 15

## மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக கறுப்புக் கொடிப் போராட்டம்
### அனைவரையும் அணிதிரளுமாறு அழைப்பு

(கொழும்பு)

மின் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து அனைத்து வீடுகளிலும் வர்த்தக நிலையங்களிலும் புனித ஸ்தலங்களிலும் கறுப்புக் கொடி ஏற்றுமாறு பொது மக்களிடம் கோரிக்கை விடுப்பதாக மின்சாரப் பாவனையாளர் சங்கத்தின் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க தெரிவித்துள்ளார்.

இன்று முதல் எதிர்வரும் நவம்பர் 20 ஆம் திகதி வரை இதனை நடைமுறைப்படுத்துமாறும் பொதுமக்களை அவர் கேட்டுக் கொண்டுள்ளார். 15

## மருத்துவபீட மாணவர்கள் கொழும்பில் பாரிய போராட்டம்
### கண்ணீர்ப் புகை, நீர்த்தாரைப் பிரயோகம்

(கொழும்பு)

அரசுக்கு எதிராக மருத்துவ பீட மாணவர்கள் நேற்று பாரிய போராட்டத்தை முன்னெடுத்தனர்.

குறித்த போராட்டத்தை கலைக்க அவர்கள் மீது கண்ணீர்ப் புகை, நீர்த்தாரை பிரயோகம் முன்னெடுக்கப்பட்டது. 15



## கல்லுண்டாயில் 3 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து
### ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)


கல்லுண்டாயில் 3 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் கீரிமலை பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய ஜோசப் சுதர்சன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சைக்கிள், மோட்டார் சைக்கிள் மற்றும் கார் என்பன ஒன்றுடன் ஒன்று மோதியதில் இவ்விபத்து சம்பவித்துள்ளது.

சைக்கிளில் சென்ற நபர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் 15

## தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக மீண்டும் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக மீண்டும் போராட்டம் ஆரம்பமாகியுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயத்தின் கட்டுப் 15

## சீன முன்னாள் பிரதமர் மரணம்

(பீஜிங்)

சீனாவின் முன்னாள் பிரதமர் லீ கெகியாங் (வயது-68). மாரடைப்பால் நேற்றுக் காலமானார்.

2013ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை பிரதமராக இருந்தார்.

ஷாங்காய் நகரில் வசித்து வந்த அவ 15

## டைனமைட் குச்சிகளோடு மன்னாரில் ஒருவர் கைது



15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கை இக்கட்டான தருணத்தில் பாலஸ்தீனத்துடன் துணை நிற்கிறது



## பாலஸ்தீன தூதுவர் வரவேற்பு

(காசா))

பாலஸ்தீனத்தின் மீது தாக்குதல் நடத்திவரும் இஸ்ரேலுக்கு எதிராக சர்வதேச சமூகம் குரல் கொடுக்க வேண்டும். இந்த இக்கட்டான தருணத்தில் இலங்கை மக்கள் பாலஸ்தீனத்துடன். இருப்பதற்காக இலங்கைக்கான பாலஸ்தீனத் தூதுவர் சுஹைர்தர் சைட் நன்றி தெரிவித்தார்.

இலங்கைக்கான பலஸ்தீன தூதரகம் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், பாலஸ்தீனம் எதிர்கொண்டுள்ள இந்த இக்கட்டான நேரத்தில் பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக நிற்கும் இலங்கை அரசாங்கம் மற்றும் இலங்கை மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இலங்கையின் பிரதான ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களும் பாலஸ்தீனம் தற்போது எதிர்நோக்கி வரும் நிலைமையை புரிந்து கொண்டு செயற்படுகின்றன.

இஸ்ரேல்-பாலஸ்தீனமோதல்களுக்கு மத்தியில் உயிரிழந்த இலங்கைப் பெண்ணின் குடும்பத்திற்கு பாலஸ்தீன அரசாங்கம் அனுதாபங்களை தெரிவிக்கிறது.

காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்கள் அனைத்தும் கடுமையான மனித உரிமை மீறல்களாகும். சர்வதேச சமூகம் பாலஸ்தீன மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்க வேண்டும். சர்வதேச சட்டத்தின்படி, இஸ்ரேலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை விடுக்கிறோம்.

காஸா பகுதியானது வரலாற்றில் இருந்து பாலஸ்தீனத்திற்கு சொந்தமான ஒரு பிரதேசமாகும்.

தற்போது பாலஸ்தீனத்திற்கு எதிராக செயற்படும் ஜேர்மனி, பிரான்ஸ், பிரித்தானியா மற்றும் அமெரிக்கா குறித்து கவலையடைகிறோம்.

எமது பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மையை அழித்து தேசிய வளங்களை கொள்ளையடிக்கும் தலையீடுகளை வன்மையாக கண்டிக்கிறோம்.

அல்ஜீரா ஊடகவியலாளர் ஒருவரின் குடும்பத்தைச் சேர்ந்த மூவர் நேற்றைய தினம் தாக்குதலில் உயிரிழந்தனர். இதற்கும் கவலை தெரிவிக்கிறோம்" என்றும் தூதுவர் தெரிவித்தார். (ம-7)


**தேவை**

**யாழை அண்மித்த சிற்றுண்டிசாலைக்கு சப்ளையர் தேவை.**

சம்பளம் - 45,000/= (மதிய உணவு இல்லாமல்)

37,500/= (மதிய உணவுடன்)

வாரம் 1 நாள் விடுமுறை

வயது எல்லை 30 - 55 (17594)

**077 247 3676**

**Romania வேலைவாய்ப்பு விசா**

**Romania** நாட்டில் **Electrician** மற்றும் தொழிற்சாலை வேலைவாய்ப்புக்கள் உள்ளன. ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடாவிற்குமான Tour Visa தேவைப்படுபவர்கள் தொடர்புகொள்ளவும்.

**Hybrid International hub (pvt) Ltd, Jaffna**

(வேம்படி மகளீர் கல்லூரி அருகில்) (C-7420)

**021 222 1265, 076 250 0098, 077 815 5920**


## குடும்பஸ்தர் அடித்துக் கொலை சந்தேகத்தில் மூவர் கைது

(முறிகண்டி)

கிளிநொச்சி - வட்டக்கச்சி பகுதியில் 23 வயதுடைய இளம் குடும்பஸ்தர் அடித்து கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி இராமநாதபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வட்டக்கச்சி - 5 வீட்டுத்திட்டம் பகுதியில் குறித்த சம்பவம் 25ஆம் திகதி இரவு 10 மணியளவில் இடம்பெற்றிருந்தது.

கல்மடுநகர் - சம்புக்குளம் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான இளம் குடும்பஸ்தரே சம்பவத்தில் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட இராமநாதபுரம் பொலிஸார் ஒரு பெண் உட்பட மூவரை நேற்று பிற்பகல் கைது செய்தனர்.

உயிரிழந்தவரை தொலைபேசி மூலம் அழைத்த பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலும் சந்தேகநபர்களை தேடி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7,100)


# மரண அறிவித்தல்



தோற்றம் 15 - 05 - 1950

பிறப்பு 24 - 10 - 2023

## இராமு சுப்பிரமணியம்

ஏழாலை தெற்கு மயிலங்காடு பிள்ளையார் கோயில் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமு சுப்பிரமணியம் அவர்கள் கடந்த (24.10.2023) செவ்வாய்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும் ஜெயக்குமார், விஜயகுமார், தர்சிகா, விஜிதா, ராஜ்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (29.10.2023) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்

076 094 9272

(C -7508)


## சாவகச்சேரிப் படுகொலையின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல்



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் படுகொலையின் 36ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் சாவகச்சேரிப் பொதுச்சந்தை வளாகத்தில் நேற்று மாலை இடம் பெற்றது.

இதன்போது 1987ஆண்டு ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி சாவகச்சேரி சந்தைப் பகுதியை அண்மித்து இந்திய விமானப்படையின்மிலேச்சத்தனமான தாக்குதலில் பலியான 68 பொதுமக்களுக்கும் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

சாவகச்சேரி நகர சபையின் முன்னாள் உறுப்பினர் வீ.விஜயேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இவ் அஞ்சலி நிகழ்வில், உயிரிழந்த பொதுமக்களின் உறவுகள், பொதுமக்கள், வியாபாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலிசெலுத்தியிருந்தனர்.

கந்தசஷ்டி விரத இறுதி நாளில் சூரன் தாங்கிய ஊர்தியை இலக்கு வைத்து இந்திய விமான படையின் இரண்டு உலங்குவானூர்திகள் நடத்திய தாக்குதலில் 68 பொதுமக்கள் உயிரிழந்ததுடன், 175 பேர் காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,104)

## யாழ்ப்பாணம் மாநகரில் இரு உணவகங்களுக்கு சீல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரில் சுகாதார சீர்கேடு நிறைந்து காணப்பட்ட உணவகமும் சுகாதார பிரிவினரின் அனுமதி பெறாது இயங்கிய உணவகமும் நீதிமன்ற கட்டளையில் சீல் செய்யப்பட்டு மூடப்பட்டன.

யாழ்ப்பாணம் மாநகர் ஆரியகுளம் சந்தி பகுதியில் அமைந்துள்ள பிரபல சைவ உணவகத்தில் வாடிக்கையாளர் ஒருவருக்கு புழுவுடன் உணவு வழங்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம்மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினரிடம் முறையிட்டார். விசாரணைகளை முன்னெடுத்த பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மாநகர சுகாதார பிரிவினரால் குறித்த உணவகம் பரிசோதிக்கப்பட்டது. உணவகத்தில் சுகாதார சீர்கேடுகளை சீர்செய்ய அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

நேற்று மீண்டும் யாழ்ப்பாணம் மாநகர பொது சுகாதார பரிசோதகர் பா.சஞ்சீவன் தலைமையிலான குழுவினரால் குறித்த உணவகம் பரிசோதனை செய்யப்பட்டது.

இதன்போது சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் எவையும் நிவர்த்தி செய்யப்படாமலே காணப்பட்டது. அதனால் பொதுச் சுகாதார சட்ட விதிகளின் கீழ் அந்த உணவகத்தின் உரிமையாளர் மீது யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகரில் உரிய அனுமதி பெறப்படாமல் இயங்கிய மற்றோர் உணவகமும் பரிசோதிக்கப்பட்டது. அது தொடர்பிலும் வழக்குத் தொடரப்பட்டது. 2 உணவகங்களிற்கும் எதிரான வழக்குகள்மேலதிக நீதிவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தன.

உணவகங்களின் குறைபாடுகள் சீர் செய்யப்பட்டு உரிய அனுமதியளிக்கும் வரை அவற்றை சீல் செய்து வியாபார நடவடிக்கையை இடைநிறுத்த மன்றில் விண்ணப்பம் முன்வைக்கப்பட்டதையடுத்து உணவகத்துக்கு சீல் வைக்கப்பட்டது. (ம-7,33,104)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தின் அடக்கு முறைகளுக்கு எதிராக அதிபர், ஆசிரியர்கள் போராட்டம்







கடந்த 24 ஆம் திகதி இசுறுபாய முன்பாக நடத்திய அதிபர், ஆசிரியர் போராட்ட ஊர்வலத்தின் மீது அரசு நடத்திய வன்முறைத் தாக்குதல் சம்பவத்தை கண்டித்து நேற்று பாடசாலை நிறைவடைந்த பின்னர் தமது பாடசாலைகளின் முன்பாக நின்று எதிர்ப்பை வெளிப்படுத்தும் அதிபர், ஆசிரியர்கள்.

(படங்கள்- சிவசாந்தன், கஜிந்தன்)

## பணிப்பெண்களை நாடு கடத்தியது குவைத்

(கொழும்பு)

குவைத்தில் நீண்ட காலமாக சட்டவிரோதமாக தங்கியிருந்து வெளிநாட்டில் பல்வேறு இடங்களில் பணிபுரிந்து வந்த இலங்கை வீட்டுப் பணியாளர்கள் 28 பேர் நேற்று குவைத்திலிருந்து நாடு கடத்தப்பட்டு கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இலங்கைக்கு வருவதற்காக குவைத்தில் உள்ள இலங்கை தூதரகத்தில் குறித்த குழுவினர் பதிவு செய்துள்ளனர். மேலும் இந்த இலங்கையர்களை இலங்கைக்கு அனுப்புவதற்கு தூதரக அதிகாரிகள் பொலிஸார், குற்றப் புலனாய்வுத் துறை மற்றும் நீதித் துறையுடன் இணைந்து பணியாற்றியுள்ளனர்.

வந்தவர்களில் பெரும்பாலானோர் அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் வசிப்பவர்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் 24 வீட்டுப் பணிப்பெண்களும் 4 பணிப்பெண்களும் உள்ளடங்குவர். (நி-6)

## எதிர்காலத்தில் மின்கட்டணத்தை குறைக்கத் திட்டம்- இந்திக்க

(கொழும்பு)

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களை செயலிழக்கச் செய்வதற்கு ஏற்படுத்தப்பட்ட தடைகள் அனைத்தும் முறியடிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்துள்ளார்.

மின்சார உற்பத்தி மூலப் பொருட்களை சேகரிப்பது தொடர்பாக அதன் சப்ளையர்களுடன் சில முடிவுகள் எட்டப்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் மின் கட்டண குறைப்பு திட்டத்தை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

கம்பஹாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட மின்வலு மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த இந்தக் கருத்துக்களை வெளியிட்டார். (நி-6)

## குறைவடைந்த சுங்கவரி வருமானம்

### இலங்கை சுங்கத் திணைக்களம்

(கொழும்பு)

2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் சுங்க வரிவருமானத்தில் கணிசமான குறைவு ஏற்பட்டுள்ளதாக இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வாகன இறக்குமதியில் குறைந்துள்ளமையினால் வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட வரி வருமான இழப்பும் இந்த நிலைமையை நேரடியாகப் பாதித்துள்ளதாக சுங்கப் பணிப்பாளர் சிவலி அருக்கொட தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர்மேற் கண்டவாறு தெரிவித்தார். (நி-6)

## புறக்கோட்டை வர்த்தக நிலையத்தில் தீப் பரவல்- 22 பேர் மருத்துவமனையில்

(கொழும்பு)

கொழும்பு புறக்கோட்டை இரண்டாம் குறுக்குத் தெருவில் உள்ள ஆடை விற்பனை நிலையம் ஒன்றில் நேற்று வெள்ளிக்கிழமை ஏற்பட்ட தீ பரவல் சம்பவத்தில் பெண் ஒருவர் உட்பட 22 பேர் காயமடைந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. விபத்தில் காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் அறுவர் பலத்த தீக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. பல வர்த்தக நிலையங்கள் தீயில் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை, இது குறித்து புறக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-6)

## பேருந்து விபத்துக்களால் 90 மில்லியன் ரூபா நட்டம்

(கொழும்பு)

இலங்கையில் பேருந்து விபத்துக்கள் காரணமாக இலங்கை போக்குவரத்து சபைக்கு வருடாந்தம் தொண்ணூறு மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுவதாக இலங்கை போக்குவரத்து சபையின் விபத்து விசாரணை முகாமையாளர் எரந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

வருடாந்தம் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான சுமார் 1500 பேருந்துகள் பல்வேறு விபத்துக்களில் சிக்குவதாகவும் அவற்றில் 60 முதல் 70 வரையிலான விபத்துக்களில் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான விபத்துக்குள்ளாகும் பேருந்துகளை இயக்குவதற்கு ஏற்ற கால அவகாசம் அதிகமாவதுடன், அதன் போது ஏற்படும் வருமானமும் கணக்கில் கொள்ளப்படுவதனால் இலங்கை போக்குவரத்து சபைக்கு வருடாந்தம் பல பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுபோன்ற விபத்துகளை குறைக்கும் வகையில், ஓட்டுநர்களுக்கு, பாதுகாப்பான வாகனம் ஓட்டுவதற்கான தொழில்நுட்ப முறைகளுடன் கூடிய பயிற்சி வகுப்பு ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு, முந்நூறு ஓட்டுனர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, சாலை விபத்துகளை குறைக்க முடிந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## கொடுப்பனவுகள் அனைத்தும் இனி இணையத்தினூடாக மேற்கொள்ளப்படும்

### உள்ளூராட்சி அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

அனைத்து உள்ளூராட்சி மன்றங்களில் இணையம் ஊடாக கொடுப்பனவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.


முன்னோடி திட்டம் 2024 ஜனவரி முதல்வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படும் என இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கம்புர தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தின் கீழ் மக்கள் வரி உட்பட பல்வேறு கொடுப்பனவுகளை செலுத்த முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வரி வருவாயை அதிகரிப்பது மற்றும் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைக் குறைப்பதே இத்திட்டத்தின் நோக்கம் என ஜனக வக்கம்புர தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் அணியை வீழ்த்தி தென்னாபிரிக்கா திரில் வெற்றி





உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தென்னாபிரிக்கா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையலான போட்டி நேற்று நடைபெற்றது.

நேற்று போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதற்கமைய, பாகிஸ்தான் அணி 46.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 270 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

அணிசார்பில் அதிகபடியாக, சவுத் ஷகீல் 52 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

இந்நிலையில் 271 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 47.2 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அணிசார்பில் அதிகபடியாக எய்டன் மார்க்ரம் 91 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் ஷஹீன் ஷா அப்ரிடி 45 ஓட்டங்களுக்கு 3 விக் கெட்டுக்களை கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்ட நாயகனாக 4 விக்கெட்டுக்களை கைப்பற்றி தென்னாபிரிக்காவின் வெற்றிக்கு வித்திட்ட சாம்சி தெரிவானார். (ம-7)

## இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தையும் தவறவிடும் ஹார்த்திக் பாண்ட்யா




இந்திய அணியின் ஆல்-ரவுண்டர் ஹார்திக் பாண்ட்யா, வங்காளதேசத்துக்கு எதிரான ஆட்டத்தில் பந்தை தடுக்க முயற்சித்த போது இடறி விழுந்து இடது கணுக்காலில் காயமடைந்தார். பரிசோதனையில் தசை நாரில் சிறிய அளவில் பாதிப்பு ஏற்பட்டு இருப்பது கண்டறியப்பட்டது.

இதனால் உலகக் கோப்பையில் நியூசிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் விளையாடவில்லை. அவர் தற்போது பெங்களூருவில் தேசிய கிரிக்கெட் அகடமியில் காயத்தில் இருந்து மீள்வதற்கான பயிற்சி முறைகளை மேற்கொண்டுள்ளார். கிரிக்கெட் வாரியத்தின் மருத்துவ கமிட்டி முன் இன்று அவருக்கு உடல் தகுதி சோதனை நடத்தப்படுகிறது. அதன்பிறகே அவர் எந்த போட்டிக்கு திரும்புவார் என்பது உறுதியாக தெரியவரும்.

என்றாலும் வருகிற 29-ஆம் திகதி லக்னோவில் நடக்கும் இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்திலும் அவர் ஆடமாட்டார் என்று கிரிக்கெட் வாரிய வட்டாரங்கள் தெரிவித்தன. ஏபாக அவர் முழு உடல் தகுதியுடன் இருக்க வேண்டும் என்று அணி நிர்வாகம் விரும்புகிறது. அதனால் அவருக்கு அதற்கு அடுத்த ஆட்டத்திலும் ஓய்வு அளிக்கப்படலாம் என்று தெரிகிறது. (ம-7)

## ஆஸ்திரேலியா-நியூசிலாந்து தரம்சாலாவில் இன்று பலப்பரீட்சை




உலக கோப்பை கிரிக் கெட் போட்டியில் இன்று சனிக்கிழமை தரம்சாலாவில் காலை 10.30 மணிக்கு நடைபெறும் முதல் ஆட்டத்தில் ஆஸ்திரேலியா-நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன.

ஆஸ்திரேலிய அணி தொடக்கத்தில் இந்தியா விடம் 6 விக்கெட் வித்தியா சத்திலும், 2 ஆவது போட் டியில் தென்ஆப்பிரிக்கா விடம் 134 ரன் வித்தியா சத்திலும் தோற்றது. அதைத் தொடர்ந்து 3 போட்டிகளில் வெற்றி பெற்று முத்திரைப் பதித்தது.

இலங்கையை 5 விக்கெட் வித்தி யாசத்திலும், பாகிஸ்தானை 67 ரன்னிலும், நெதர்லாந்தை 309 ரன்னிலும் வீழ்த்தியது.

6 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்தில் இருக்கும் ஆஸ்திரேலிய அணி நியூசிலாந்தை வீழ்த்தி 4 ஆவது வெற்றியை பெறும்ஆர்வத்தில்உள்ளது. (ம-7)

## இன்னும் ஓய்வு பெறவில்லை எம்.எஸ்.தோனி பேட்டி

2024ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல் கிரிக்கெட் தொடருக்கான மினி ஏலம் டிசெம்பர் மாதம் 18 அல்லது 19 ஆம் திகதியில் நடக்கும் என தகவல்வெளியாகி உள்ளது.

இதையடுத்து ஐ.பி.எல் தொடரில் ஒவ்வொரு அணிகளிலும் தக்க வைக்கப்பட்ட வீரர்கள் பட்டியலை சமர்ப்பிக்க நவம்பர் 15ஆம் திகதி கடை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. இந்நிலையில் ஏராளமான ரசிகர்கள் மனதில் எழும் ஒரே கேள்வி என்னவென்றால் அடுத்த ஐ.பி.எல் தொடரில் எம்.எஸ்.தோனி விளையாடுவாரா என்பதுதான். இந்நிலையில் இந்த கேள்விக்கு பதில் அளிக்கும் விதமாக பெங்களூரில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட தோனியிடம் இருந்து ஒரு பதில் கிடைத்துள்ளது. அதாவது பெங்களூரில் நடை பெற்ற தனியார் நிகழ்ச்சி ஒன்றில் சி.எஸ்.கே கேப்டன் தோனி கலந்து கொண்டார்.

அந்த நிகழ்ச்சியில் தொகுப்பாளர் பேசும் போது கிரிக்கெட்டில் இருந்து தோனி ஓய்வுபெற்றுவிட்டார் என்று கூறினார். அப்போது தோனிக்கு அருகில் இருந்த நபர் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து மட்டும் தான் தோனி ஓய்வு பெற்றுள்ளார் என்று கூறி தவறை திருத்தினார். அதற்கு தோனி ஆம் என்று கூற சி.எஸ்.கே ரசிகர்கள் கரகோஷம் எழுப்பினர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரணடைந்தவர்களின் பட்டியலை இராணுவம் ஒப்படைக்க வேண்டும்

## சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம் வலியுறுத்து

(ஜெனீவா)

**வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பில் தாம் சிரத்தையுடன் செயற்படுவதை நிரூபிப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம் வலியுறுத்தியுள்ளது.**



யஸ்மின் சூக்கா தலைமையிலான சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டத்தினால் இது குறித்து அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

2009 மே மாதம் 18 ஆம் திகதி சரணடைந்தவர்களின் பட்டியலை ஒப்படைக்குமாறு 58 ஆவது படைப்பிரிவுக்குக் கட்டளையிட வேண்டும்.

அத்துடன் இராணுவத்தின் 58, 59 ஆம் மற்றும் 53 ஆம் படைப்பிரிவுகளின் கட்டளைத் தளபதிகள் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தினால் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தவும் வலியுறுத்தியுள்ளது.

அரசாங்கமானது சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்துவதற்காக வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தை உரியவாறு கையாள்வதாகப் பாசாங்கு காட்டுகிறது. மேலும் விசாரணைகளை மேற்கொள்வதற்கென அரசாங்கத்தினால் நியமிக்கப்படும் ஆணைக்குழுக்கள் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதியையோ அல்லது ஆறுதலையோ பெற்றுத்தரவில்லை என்றும் சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது. (நி-6)

# பெரியபுராண படன நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

சுதுமலை இந்துசமய விருத்திச் சங்கம் நடத்தும் பெரிய புராண படன நிறை விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு சுதுமலை சிவன் கோயில் ஆலய மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக ஆங்கில மொழிக் கற்பித்தல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. கந்தையா ஸ்ரீகணேசன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் சு.உதயபாலன் மற்றும் விசேட விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோத்தர் திருமதி.ஜனார்த்தனன் அகல்யா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6)

# சுகாதாரத்துறையிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாண அமைச்சர் அழைப்பு

(கொழும்பு)

அனைத்து மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்கள், வைத்தியசாலை பணிப்பாளர்கள் மற்றும் ஏனைய சிரேஷ்ட அதிகாரிகள் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

மருந்துகள் மற்றும் விசேட வைத்தியர்களின் பற்றாக்குறை உள்ளிட்ட சுகாதாரத் துறையில் உள்ள பிரச்சினைகள் குறித்து கலந்துரையாட சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன அழைப்பு விடுத்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் சுகாதாரத் துறையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான குறுகிய மற்றும் நீண்டகாலத் திட்டமொன்றை உருவாக்குவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த கலந்துரையாடலின் போது, அனைத்து அத்தியாவசிய மருந்துகளையும் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் கொள்வனவு செய்வதற்கான திட்டத்தை வகுப்பதற்கான முடிவிற்கு அதிகாரிகள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், ஆட்சேர்ப்பு மற்றும் இடமாற்ற நெறிமுறைகளை மறுசீரமைக்க அதிகாரிகள் அழைப்பு விடுத்துள்ளதால் வைத்தியசாலைகளில் உள்ள விசேட வைத்தியர்களின் பற்றாக்குறை குறித்தும் இதன்போது விவாதிக்கப்படும் என கூறப்பட்டுள்ளது. (நி-6)

# இராசிபலன்

28.10.2023
ஐப்பசி 11, சனிக்கிழமை
பூரணை பின்னிரவு 2.39 மணிவரை

ரேவதி முற்பகல் 8.14 மணிவரை
சுபநேரம் -3.03-4.33 மணிவரை
இராகுகாலம்-9.03-10.33 மணிவரை

சந்திராஷ்டமம்-
உத்தரம்
பூரணை விரதம்

வளவன்



மேஷம்

தேகநலனில் அக்கறை கூடும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், போசன சுகமுண்டு.



கடகம்

வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான நாள்.




துலாம்

செய்தொழில் மேன்மையுண்டு, திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நண்பர்களின் சந்திப்புகள் இடம்பெறும் வாய்ப்புண்டு.




மகரம்

செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், பெற்றோர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும்.




ரிஷபம்

தொழில் ரீதியாக பயணங்கள் இடம்பெறலாம், ஒரு வேலையை முடிக்க சற்று அலைச்சல்கள் ஏற்படலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.




சிம்மம்

சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு.




விருச்சிகம்

பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.



கும்பம்

குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், போசன சுகமுண்டு.



மிதுனம்

இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், மற்றவர்கள் பாராட்டும் வகையான காரியமொன்றை செய்வீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.




கன்னி

மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, எடுத்த முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.



தனுசு

நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.



மீனம்

தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், எதிர்பாராத தனவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.

நம்மை பாவம் செய்யாமல் தடுப்பவர்தான் நண்பன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாணி விழா

(யாழ்ப்பாணம்)

வேவில் விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தின் வாணி விழா இன்று சனிக் கிழமை மாலை 5.30 மணி யளவில் வேவில் பிள்ளையார் ஆலய வீதியில் குறித்த சனசமூக நிலைய தலைவர் த. ஸ்ரீதர்சன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட செயலக பல்நோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களம் மாவட்ட இணைப்பாளர் நவரட்ணம் மயூரூபன் சிறப்பு விருந்தினராக சிதம்பாரா கல்லூரியின் ஓய்வு பெற்ற ஆசிரியர் திருமதி விமலாதேவி சிவகுமார் , கௌரவ விருந் தினராக தொண்டைமனாறு வீரகத்தி பிள்ளை மகாவித்தி யாலயம் ஆசிரியர் நடராசா சுதாகர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6)




# யாழ்.போதனாவில் குருதிக்குத் தட்டுப்பாடு

## குருதிக் கொடையாளர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.போதனா மருத்துவமனையில் எல்லா வகை குருதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என இரத்த வங்கி அறிவித்துள்ளது.**



விபத்துக்கள், சத்திர சிகிச்சைகள், குருதிச்சோகை நோயாளர்கள், புற்றுநோயா ளர்கள் மற்றும் குருதி தேவை ப்படும் நோயாளர்களின் எண் ணிக்கை நாளுக்கு நாள் மருத் துவமனையில் அதிகரித்து செல்வதால் இரத்த வங்கியால் விநியோகிக் கப் படுகின் ற குருதியின் அளவும் கூடிக் கொண்டே செல்கின்றது.

இதனால் இரத்த வங்கியில் எல்லாவகை குருதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எமது இரத்த வங்கியில் 330 பைந்த் குருதி குறையா மல் இருக்க வேண்டும். ஆனால் தற்போது இருக்கும் குருதியின் அளவு 238 பைந்த் ஆகும்.

இதனால் நோயாளர்க ளுக்கு தேவையான குரு தியை எம்மால் வழங்க முடி யாமலுள்ளது. ஒரு அனர்த்தம் நிகழுமாயின் அதனால் ஏற் படும் குருதியிழப்பை ஈடுசெய் வதற்கு எம்மால் முடியாமல் போகலாம். ஆகவே இந்த நிலைமையை கவனத்தில் கொண்டு பொது மக்கள் மற்றும் குருதிக்கொடையாளர்கள் இரத்த தானம் செய்வதற்கு முன்வர வேண்டும். மேலதிக தகவல் களுக்காக 077 210 5375 எனும் தொலைபேசி இலக்க த்துடன் தொடர்பு கொண்டு குருதியினை வழங்க முடியும் என இரத்த வங்கி பிரிவு தெரி வித்துள்ளது. (நி-6-33)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தினரால் முன்னெ டுக்கவுள்ள இரத்ததான முகாம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணிவரை யாழ்.சத்திய சாயி சேவா நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே குருதிக்கொடை யாளர்களை குறித்த இரத்த தான முகாமில் கலந்து கொண்டு குருதிக் கொடை யினை அளிக்குமாறு ஏற்பா ட்டாளர்கள் அறிவித்து ள்ளனர். (நி-6)

## சிறுவர் முதியோர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

புதிய சோனக தெரு ஜே/ 88 கிராம அபிவிருத்திச் சங் கமும் முதியோர் சங்கமும் இணைந்து நடத்தும் சர்வ தேச சிறுவர் முதியோர் தின விழா நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1 மணிக்கு ஆறுகால்மட அறிவொளி கலையரங்கில் குறித்த சங்கத் தலைவர் சி.க. தம்பிராசா தலைமையில் இடம்பெற வுள்ளது. (நி-6)

## ஷெல் மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரி விற்குட்பட்ட நுணாவில் மேற் குப் பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை மோட்டார் ஷெல் ஒன்று அடை யாளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

காணியை உழவியந்திர த்தின் உதவியுடன் துப்பரவு செய்த போதே ஷெல் அடை யாளம் காணப்பட்டுள்ள நிலை யில் காணி உரிமையாளரால் சாவகச்சேரிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் வெடிபொருளை மீட்பதற்கான நடவடிக்கை களை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்ற னர். (நி-6-30)




யாழ்.போதனா மருத்துவமனை அதி தீவிர சிகிச்சை பிரிவிற்கு (Nicu) ரூ.12.5 மில்லியன் பெறுமதியான இயந்திர மொன்றை எஸ்.கே. நாதன் நேற்று முன்தினம் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (படம் -சிவசாந்தன்)

## பாலஸ்தீனத்திற்கு ஆதரவு தெரிவித்து யாழில் முஸ்லீம் மக்கள் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் நேற்று பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவு தெரிவித்து முஸ்லீம் மக்கள் போராட்ட மொன்றை முன்னெடுத்தனர்.

நேற்று வெள்ளிக் கிழமை மதியம் இடம் பெற்ற ஜும்மா தொழுகையினை தொடர்ந்து போராட்டக்காரர்கள் ஐந்து சந்தி வரை பேரணியாகச் சென்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் அனைத்து பள்ளிவாசல் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற போராட்டத்தில் சர்வதேச சட்ட ங்கள் இஸ்ரேலுக்கு பொரு ந்தாதா , அமெரிக்காவின் குழ ந்தை இஸ்ரேலே தாக்குதலை உடன் நிறுத்து போன்ற வாச கங்கள் மும்மொழிகளிலும் அடங்கிய அட்டைகள் போரா ட்டகாரர்களால் தாங்கியி ருந்தவாறு கோஷங்களும் எழுப்பப்பட்டது. (நி-6-33-104)

## 12 இந்திய மீனவர்களையும் மறியலில் வைக்க மன்று உத்தரவு

(கரணவாய்)

இந்தியா இராமநாதபுரம் மாவட்ட மீனவர்கள் 12 பேரையும் எதிர்வரும் நவம்பர் மாதம் எட்டாம் திகதி வரை மீண்டும் விளக்கமறியல் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் ஜே. கஜநிதிபாலன் உத்தரவிட்டார்.

கடந்த 14ஆம் திகதி கடற் படையால் கைது செய்யப்பட்ட 12 மீனவர்களை நேற்று வெள் ளிக்கிழமை இரண்டாவது தடவையாக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் யாழ். நீரி யல்வளத்துறை அதிகாரிகள் முற்படுத்தினர்.

இதன் போது நீரியல் வள த்துறை அதிகாரிகள் மீன வர்கள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யாததால் மீனவர்களுக்கு 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்த ரவிட்டார்.

மேலும் சந்தேகநபர்கள் மீதான குற்றப்பத்திரம் அடுத்த தவணையின் போது தாக்கல் செய்யப்படாதவிடத்து, நீதிமன் றம்சந்தேகநபர்களை விடுதலை செய்யும் நிலை ஏற்படும் எனத் தெரிவித்தார். (நி-6-60-33)

## தேசிய புத்தாக்கப் போட்டியில் வேம்படி மாணவிக்கு வெள்ளிப்பதக்கம்




(யாழ்ப்பாணம்)

தேசிய புத்தாக்கப் போட்டி யில் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மாணவி ரூபிகா அருந்தவம் வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார்.

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினரால் வரு டாந்தம் நடத்தப்படும் பாட சாலை மாணவருக்கான "சஹசக் நிவமும்" எனும் பெயரில் முன்னெடுக்கப்படும் தேசிய புத்தாக்கப்போட்டியின் 2022 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கும் விழா நேற்று முன்தினம் கொழும்பு பண்டா ரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப த்தில் இடம்பெற்றது. இந் நிக ழ்விலே குறித்த பாடசாலை மாணவி வெள்ளிப்பதக்கத்தை பெற்றுபெருமை சேர்த்துள்ளார்.

குறித்த மாணவி சப்ர கமுவா பல்கலைக் கழகத்தின் விவசாய விஞ்ஞான பீடத் தினரால் வருடாந்தம் தேசிய ரீதியில் பாடசாலை மாண வருக்கிடையே நடத்தப்படும் புத்தாக்கப் போட்டியான Agri Food innova போட்டியிலும் கடந்த இரண்டு வருட ங்களாகப் பங்குபற்றி பதக்க ங்களையும் சான்றிதழ்களை யும் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. (நி-6-33)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தெருச்சண்டியனான மட்டக்களப்பு தேரரை கைது செய்து அங்கொடைக்கு அனுப்புங்கள்

## மனோ எம்.பி காட்டம்

**(கொழும்பு) மட்டக்களப்பு அம்பிட்டிய சுமனரத்தின தேரர், தெருச் சண்டியனாக மாறி, "தமிழர்களை துண்டு துண்டாக வெட்டு வேன், கொல்லுவேன்" என்று மன நோயாளி போல் நடுத்தெருவுக்கு வந்து கதறுகிறார். இவரை கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும். அல்லது அங்கொடையில் அடைக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில், அம்பிட்டிய சுமனரத்தின தேரருக்கு தனது தாயின் கல்லறை தொடர்பில், மட்டக்களப்பு மாவட்ட எம்பிக்களுடன் அல்லது மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளருடன் ஏதும் பிரச்சினை இருக்குமாயின், அவை பற்றி அவர் பொலிஸில் புகார் செய்ய வேண்டும். மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் இதை கலந்து பேசும்படி மட்டக்களப்பு மாவட்ட செயலாளரை கடிதம் மூலம் கோர வேண்டும். அடுத்த ஒருங்கிணைப்பு குழுக்கூட்ட நிகழ்ச்சி நிரலில் இதை இடம்பெற செய்து, பேசி தீர்த்துக்கொள்ள வேண்டும். இது தான் சட்டப்படியான நாகரீக நடைமுறை.

இதைவிடுத்து சண்டியன் மாதிரியும், மனநோயாளி மாதிரியும் நடுத்தெருவுக்கு வந்து, "தமிழர்களை துண்டு துண்டாக வெட்டுவேன், கொல்லுவேன், தெற்கில் வாழும் தமிழரை கொல்லுவேன்" என்று ஹிஸ்டீரியாகாரனாக கத்துவது எந்த வகையில் நியாயம்?

எல்லாவற்றையும் கடந்து செல்வதைப் போல் ஜனாதிபதி ரணில் இதையும் கடந்து போக முயற்சிக்கக் கூடாது.

சில காலம் முன் ஜெரோம் பெர்னாண்டோ என்ற ஒரு போதகரையும், நகைச்சுவை பேச்சாளர் நடாஷா எதிரிசூரிய ஆகியோரை கைது செய்ய முடியுமானால், ஏன் இவரை கைது செய்ய முடியாது? பார்க்கப்போனால், ஜெரோம் பெர்னாண்டோ, நடாஷா எதிரிசூரிய ஆகியோர் பேசிய பேச்சுகளை விட இவரது பேச்சு ஆயிரம் மடங்கு மோசமானது.

மக்களின் வரிப்பணத்தில் சாப்பிடும் இவர் பல ஆண்டுகளாகவே இப்படி துவேசமாக பேசி வருகிறார். பொலிஸ் அதிகாரிகளின் கன்னத்தில் அடிக்கிறார். பொலிஸ் அதிகாரிகளின் சட்டையை பிடிக்கிறார். பொலிஸ் அதிகாரிகளின் தொப்பியை தட்டி விடுகிறார். அரச அதிகாரிகளை கெட்ட வார்த்தைகளில் திட்டுகிறார். அப்படியானால், இவர் யார்? என அவர் கேள்வி எழுப்பினார். (நி-6)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் ஊடாக நடாத்தும் தமிழ்ப் பாலபண்டிதர் தகைமைச் சான்றிதழ் கற்கைநெறி - 2023/2024 (அணி -I)**

தமிழ்ப் பாலபண்டிதர் தகைமைச் சான்றிதழ் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்**

விண்ணப்பதாரி கீழ்வரும் தகைமைகளில் ஏதாவது ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினது தமிழ்ப் பாலபண்டிதர் தகைமைக்கான பிரவேச பரீட்சையிற் சித்தி பெற்றிருத்தல்.

**அல்லது**

2. சைவப் புலவர் அல்லது சைவசித்தாந்த பண்டிதராயிருத்தல்.

**அல்லது**

3. க.பொ.த உயர்தரப்பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் தமிழ்மொழிப் பாடத்தில் திறமைச் சித்தி (C) பெற்றிருத்தல்.

**அல்லது**

4. க.பொ.த உயர்தர பரீட்சையில் எந்தவொரு பாடத்துறையிலாயினும் பல்கலைக் கழகத்திற்கு அனுமதி பெறுவதற்கான தகுதி பெற்றிருத்தல்.

**அல்லது**

5. ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அல்லது தேசிய கல்வியியற் கல்லூரி முதலான அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது நிறுவனம் ஒன்றில் பயிற்றப்பட்ட ஆசிரியராயிருத்தல்.

**கற்கைநெறிக்கான காலம்** - ஒரு வருடம் (இரண்டு பருவங்கள்)
**கற்கைநெறி மூலம்** - வார இறுதி நாட்களில் நேரடி வகுப்புக்கள்
**விண்ணப்படிவம்** - ரூபா 200.00

**விண்ணப்பிக்கும் முறை**

மக்கள் வங்கிக்கிளை கணக்கில் (கணக்கிலக்கம் 89001278003289 இல்) விண்ணப்படிவத்திற்கான கட்டணமாக ரூபா.200.00ஐச் செலுத்தி, (www.codl.jfn.ac.lk) தரவிறக்கம் செய்து பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் பற்றுச்சீட்டினை இணைத்து உதவிப்பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி எனும் முகவரிக்குத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம். (மாதிரி வைப்புச்சீட்டினை www.codl.jfn.ac.lk எனும் இணையத்தளத்தில் பார்வையிடலாம்.) கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தமிழ்ப் பாலபண்டிதர் தகைமைச் சான்றிதழ் கற்கைநெறி - 2023-2024 (அணி -I)" எனக்குறிப்பிட்டு அனுப்பிவைக்கவும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி 10.11.2023**
**பதிவாளர்.**

### இலங்கையிலுள்ள 10 இடங்களை

# உலக பாரம்பரிய பட்டியலில் இணைக்க அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள மேலும் 10 இடங்களை உலக பாரம்பரிய பட்டியலில் சேர்க்க கலாசார அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

யுனெஸ்கோவின் உலக பாரம்பரியக் குழுவிடம் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படும் என மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் காமினி ரணசிங்க தெரிவித்துள்ளார்.

பரிந்துரைக்கப்படும் இடங்களின் பட்டியலில் பண்டைய இலங்கையின் பௌத்த தியான மடங்கள், மிஹிந்தலை, பண்டைய நீர்ப்பாசன அமைப்புகள், இலங்கையின் பண்டைய கடல் மையங்கள் மற்றும் தேயிலை நிலப்பரப்பு ஆகியவை அடங்கும்.

வெப்பமண்டல நவீனத்துவத்தின் கட்டடக்கலை, சொற்பொழிவாளர் தேவாலயங்கள், மஹாயானியவாதிகளின் செல்வாக்கு பெற்ற துறவற வளாகங்கள், வரலாற்றுக்கு முந்தைய குகை வாழ்விடங்கள் மற்றும் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கடல் பகுதியின் புத்த சுவரோவிய தளங்கள் ஆகியவை பரிந்துரைக்கப்படும் தளங்களின் பட்டியலில் உள்ளன.

இலங்கையில் தற்போது எட்டு உலக பாரம்பரிய தளங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# உயர்ந்த வேகத்திலேயே மீண்டும் வீழ்ச்சியடைந்த இலங்கை ரூபாவின் பெறுமதி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி நேற்று திடீரென வீழ்ச்சியடைந்துள்ளது.

ரூபாவின் பெறுமதியில் கடந்த ஒரு வாரமாக தொடர்ச்சியாக வீழ்ச்சிப் பதிவாகி வந்த நிலையில், நேற்று முன்தினம் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்று மீண்டும் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்தநிலையில், இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 332.01 ரூபாவாகவும், கொள்வனவு விலை 321.54 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

மேலும், கனேடிய டொலரின் விற்பனை விலை 241.95 ரூபாவாகவும், கொள்வனவு விலை 231.33 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

இதன்படி, யூரோ ஒன்றின் விற்பனை பெறுமதி 352.6[illegible] ரூபாவாகவும், கொள்வனவு பெறுமதி 337.88 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

அதேசமயம், ஸ்டெர்லிங் பவுண்டின் விற்பனை பெறுமதி 404.51 ரூபாவாகவும், கொள்வனவு பெறுமதி 388.68 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

### இந்திய முன்னாள் அதிகாரிகளுக்கு மரணதண்டனை விதித்த கட்டார்



(கட்டார்)

இந்திய கடற்படையின் முன்னாள் அதிகாரிகள் 8 பேரிற்கு கட்டாரில் உளவு பார்த்த குற்றச்சாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த வழக்கை சட்ட ரீதியாக எதிர் கொள்வதாக வெளிவிவகார அமைச்சகம் கூறியுள்ளதோடு இந்த தகவலை மேலும் உறுதி செய்துள்ளது.

அதேவேளை, மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களின் பிணை மனுக்கள் பல முறை மறுக்கப்பட்டுள்ளதுடன் கட்டாரின் அதிகாரிகளால் அவர்களின் காவலும் நீடிக்கப்பட்டுள்ளது.

மேலும், கட்டாரின் முதன்மை அமர்வு நீதிமன்றம் நேற்று அவர்களுக்கு இந்த தீர்ப்பை வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கட்டாரின் ஆயுதப் படைகளுக்கு பயிற்சி மற்றும் தொடர்புடைய சேவைகளை வழங்கும் ஒரு தனியார் நிறுவனமான தஹ்ரா குளோபல் டெக்னாலஜிஸ் மற்றும் கன்சல்டன்சி சர்வீசஸ் நிறுவனத்தில் முன்னாள் கடற்படை வீரர்கள் பணிபுரிந்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்த தீர்ப்பால் நாங்கள் மிகவும் அதிர்ச்சியடைந்துள்ளதாக இந்திய வெளிவிவகாரத்துறை தெரிவித்துள்ளது. (நி-6)

# இஸ்ரேல் - காச

## மத்திய கிழக்கிற்கு அப்பா

### தீவிரவாதத்தை மேற்கத்தைய நாடுகள் தூண்டுகின்றன

(மொஸ்கோ)

**காசாவில் இஸ்ரேல் நடத்தும் போர் மத்தி அப்பாலும் பரவக்கூடும் என ரஷ்ய ஜனாதிபதி எச்சரித்துள்ளார்.**

ஒருசிலர் செய்யும் குற்றங்களுக்காக பாலஸ்தீன பகுதியில் உள்ள அப்பாவி குழந்தைகள், பெண்கள் மற்றும் வயதானவர்கள் தண்டிக்கப்படுவது தவறு என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த நேரத்தில் இரத்தக் களரி மற்றும் வன்முறையைத் தடுப்பதே அனைவரது நோக்கமாக இருக்க வேண்டும் என விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

நெருக்கடி மேலும் அதிகரித்தல் கடுமையானதும் மிகவும் ஆபத்தான மற்றும் அழிவுகரமான விளைவுகளை ஏற்ப டுத்தும் என்றும் எச்சரித்துள்ளார்.

மேற்கத்திய நாடுகள் சில மேலும் தீவிரத்தை தூண்டுவதற்கும், முடிந்தவரை பல நாடுகளையும் மக்களையும் மோதலுக்கு இழுக்க முயல்கின்றன.

மத்திய கிழக்கில் மட்டுமல்லாமல் அதன் எல்லைகளுக்கு அப்பாலும் ஒரு உண்மையான குழப்பம் மற்றும்

### அவசர சிகிச்சை பிரிவில் தண்ணீர் இல்லை

### காசா மருத்துவர்கள்

(காசா)

பொருட்களின் பற்றாக் குறை காரணமாக 130 குறைமாத குழந்தைகள் உட்பட பாதிக்கப்பட்ட நோயாளிகள் ஆபத்தில் உள்ளதாக காசாவின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மின்சாரம் இல்லாமல் வைத்தியசாலைகள் இயங்கிவருவதாகவும் இந்த நிலையில் அவசர சிகிச்சை பிரிவில் தற்போது குடிநீர் தீர்ந்து விட்டதாகவும் வைத்தியர்கள் தெரிவித்தனர். (நி-6)

### சீனாவில் புதிதாக 8 வைரஸ்கள் எச்சரிக்கை விடுக்கும் விஞ்ஞானிகள்

(பீஜிங்)

தெற்கு சீனாவில் _ள்ள ஹைனான் தீவில் புதிதாக 8 வைரஸ்களை சீன விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அவை மனிதர்களுக்கு தொற்றும் அபாயம் இருப்பதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

2 ஆண்டுகளாக கொரோனா வைரஸ் ஒட்டு மொத்த உலகத்தையும் முடக்கி போட்ட நிலையில் அந்த வைரஸ் பரவல் சீனாவில் இருந்து தான் பரவியது என உலக நாடுகள் குற்றம் சாட்டின.

ஆனால் சீனா தொடர்ந்து இந்த குற்றச்சாட்டுகளை மறுத்து வருகிறது.

இதற்கிடையே தான் தற்போது திடுக்கிட வைக்கும் இன்னொரு தகவல் வெளியாகி உள்ளது.

அதாவது, சீனாவில் புதிதாக 8 வைரஸ்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அத்தோடு இந்த வைரஸ்கள் மனிதர்களை தாக்கும் தன்மையுடன் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

### பணயக் கைதிகள் விடுதலை தொடர்பாக ஹமாஸ் பிரதிநிதிகள் ரஷ்யா விஜயம்



(மொஸ்கோ)

பணயக்கைதிகள் விவகாரத்திற்கு தீர்வை காண்பது குறித்து பேச்சுக்களிற்காக ஹமாசின் பிரதிநிதிகள் குழுவினர் மொஸ்கோவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

ஹமாஸ்பிரதிநிதிகளின் விஜயத்தினை ரஷ்யா உறுதி செய்துள்ளது.

நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்காக முக்கிய தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளதாக மொஸ்கோ தெரிவித்துள்ளது.

ஹமாசை ரஷ்யா தடை செய்யவில்லை என்பதுடன் ஹமாஸ் உறுப்பினர்கள் ரஷ்யாவிற்கு பயணங்களை மேற்கொள்வது வழமையான. விடயம் எனினும் 7 ஆம் திகதிக்கு பின்னர் ஹமாஸ் பிரதி நிதிகள் ரஷ்யாவிற்கு மேற்கொண்டுள்ள முதலாவது விஜயம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)



### காசாவில் எந்த இடமும் பாதுகாப்பானதில்லை-ஐ.நா

(ஜெனீவா)

காசாவில் எந்த இடமும் பாதுகாப்பானதில்லை என பாலஸ்தீனத்திற்கான ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான ஒருங்கிணைப்பாளர் லைன் ஹாஸ்டிங்ஸ் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களை பாதுகாக்குமாறும் அவர்கள் எங்கிருந்தாலும் உயிர்பிழைப்பதற்காக அத்தியாவசிய பொருட்களை அனுமதிக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ள அவர் பணயக்கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்

வெளியேறும் பாதைகள் மீது குண்டுவீச்சு இடம்பெறுகின்றபோது மீண்டும் வருவதற்கான உத்தரவாதங்கள் இல்லாதபோது மக்களிற்கு அசாத்தியமான வழிமுறைகளை தவிர வேறு எதுவும் இல்லாத நிலை காணப்படுகின்றது என்வும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## சா போர்
## பாலும் பரவும்

### ன்றன என்கிறார் புடின்

### மத்திய கிழக்கிற்கு
### பதி விளாடிமிர் புடின்



பரஸ்பர வெறுப்பு அலையைத் தொடங்குவதே அவர்களின் நோக்கம்.

இந்த நோக்கத்திற்காக, மில்லியன் கணக்கான மக்களின் தேசிய மற்றும் மத உணர்வுகளை விளையாட முயற்சிக்கின்றனர் என்றும் விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார். (நி-6)

## உடனடி போர் நிறுத்தம் அவசியம்
## சர்வதேச மன்னிப்புச் சபை

(லண்டன்)

பேரழிவிற்கு மத்தியில் பெருகிவரும் இறப்பு எண்ணிக்கையை நிறுத்துமாறு பிரித்தானியாவை தளமாக கொண்ட சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

மேலும் முக்கியமான உதவிகள் காசாவை அடைவதை உறுதி செய்ய, உடனடி போர்நிறுத்தம் அவசியம் என்றும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

போர்க்குற்றங்கள் உட்பட சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்கள், மோதலில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினராலும் முன்னெடுக்கப்படுவதாக சர்வதேச மன்னிப்புச் சபை கூறியுள்ளது.

இஸ்ரேலிய தரைவழித் தாக்குதல் காசா மக்களுக்கு பேரழிவை ஏற்படுத்தக்கூடும் என்பதனால் உடனடி போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்குமாறு சர்வதேச சமூகத்தை வலியுறுத்தியுள்ளது.

காசா மீதான 16 ஆண்டுகால முற்றுகையை முடிவுக்கு கொண்டு வரவும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்து பணயக் கைதிகளையும் உடனடியாக விடுவிக்கவும் அழைப்பு விடுத்துள்ளது. (நி-6)

## பெண்களுடன் இணைந்து போராடிய ஐஸ்லாந்து பிரதமர்

(அர்னார்ஹால்)

வட அட்லாண்டிக் பகுதியில் உள்ள வட ஐரோப்பிய நாடான, ஐஸ்லாந்தில் ஆண்கள் பெறும் ஊதியத்தை விட 21 சதவீதம் குறைவாகவே பெண்கள் ஊதியம் பெறுகின்றனர்.

சுகாதார பணிகள், தூய்மை பணிகள் மற்றும் குழந்தைகள் பராமரிப்பு உள்ளிட்ட பல பணிகளில் பெண்களுக்த



ஊதியம் இன்னும் குறைவாக உள்ளது.

1975இலிருந்து இது குறித்து 7 முறை போராட்டங்கள் நடத்தியும் அரசாங்கம் இவர்களின்கோரிக்கைகளை நிறைவேற்றவில்லை.

இந்நிலையில், சில நாட்களுக்கு முன் அந்நாட்டில் பெண்கள் அமைப்பினர் மீண்டும் ஒரு நாள் வேலை நிறுத்தத்திற்கு அ[illegible] விடுத்திருந்தனர்.

இதை தொடர்ந்[illegible] முன் தினம் இந்[illegible] தலைகரில் உள்ள அர்னார்ஹால் மலை மற்றும் பல முக்கிய நகரங்களில் ஆயிரக்கணக்கான பெண்கள் ஆண்களுக்கு நிகராக ஊதியம் கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்திற்கு அந்நாட்டின் பெண் பிரதமர் கேத்ரின் ஜேகப்ஸ்டாட்டிர் ஆதரவு தெரிவித்து, பணிக்கு செல்லாமல் தனது வீட்டிலேயே இருந்து கொண்டு வேலை நிறுத்தம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

## மெக்சிகோவை தாக்கிய ஓடிஸ் சூறாவளி
## 27 பேர் உயிரிழப்பு



(மெக்சிகோ)

மெக்சிகோவை தாக்கிய ஓடிஸ் சூறாவளி காரணமாக 27 பேர் உயிரிழந்துள்ளதுடன், நான்கு பேர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரபல சுற்றுலா தலமான Acapulco இல் உள்ள 80 வீதமான ஹோட்டல்கள் இந்த சூறாவளி காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சூறாவளியினால் Acapulco கடற்கரை ஹோட்டல்களில் பல பில்லியன் டொலர் சேதம் ஏற்பட்டுள்ளதாக மெக்சிகோ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், சூறாவளி காரணமாக நாட்டின் பல பகுதிகளில் மின் விநியோகத்தடை ஏற்பட்டுள்ளதுடன் பல குடியிருப்புகள் சேதமடைந்து வீதிகள் வெள்ளத்தில் முழ்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில், 8,000 இராணுவ வீரர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-6)

## மனிதகுலத்திற்கு அவமானம்
### மேற்குலகின் மௌனத்தை சாடும் துருக்கி ஜனாதிபதி



(துருக்கி)

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள் படுகொலையின் அளவை எட்டியுள்ளன என துருக்கிய ஜனாதிபதி ரெசெப் தையிப் எர்டோகன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் சர்வதேச சமூகத்தின் மௌனம் காப்பது மனிதகுலத்திற்கு அவமானம் என்றும் அவர் கூறியுள்ளார்.

இஸ்ரேல்-ஹமாஸ் போர் தொடர்பாக பாப்பரசர் போப் பிரான்சிஸுடன் தொலைபேசியில் கலந்துரையாடிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.


சுதந்திர பாலஸ்தீன அரசை அமைப்பதன் மூலம் மட்டுமே மோதலுக்கு நிரந்தர தீர்வு காண முடியும் என்ற துருக்கியின் நிலைப்பாட்டை எர்டோகன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை கட்டியெழுப்ப எம்முடன் இணையுங்கள்

## ஜனாதிபதி விசேட அழைப்பு

**(கொழும்பு) நாட்டைக்கட்டியெழுப்பும்பணியில்இணையுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்து அரசியல்வாதிகளுக்கும் நேற்று விசேட அழைப்பு விடுத்துள்ளார்.**



கொழும்பு றோயல் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்ற "ரீட் மாவத்தையின் நூற்றாண்டு விழா" நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த அழைப்பை விடுத்தார்.

புதிய நாடு, புதிய பொருளாதாரம் மற்றும் புதிய அரசியல் முறைமையை உருவாக்குவதன் மூலமே நாட்டை மீளக் கட்டியெழுப்ப முடியும்.

கட்சி ஜனநாயக அரசியலுக்குள் காணப்படும் வேறுபாடுகளை அவ்வண்ணமே தக்கவைத்துக்கொண்டு நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் சகல அரசியல்வாதிகளும் ஒன்றுபட வேண்டும்.

ஜனநாயக நாடுகளில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களைப் பேணும் வகையில் எமது அபிவிருத்திப் பாதையை மாற்றி அமைக்க வேண்டும் என அவர் கோரியுள்ளார். (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 200 | 280 | 300 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 300 | 350 |
| தக்காளி | 250 | 220 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 120 | 160 | 150 |
| கோவா | 250 | 200 | 200 | 300 |
| கரட் | 350 | 300 | 320 | 350 |
| பூசணி | 80 | 70 | 80 | 100 |
| புடோல் | 200 | 250 | 160 | 300 |
| வாழைக்காய் | 200 | 180 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 300 | 250 | 270 | 320 |
| பாகற்காய் | 450 | 450 | 400 | 400 |
| வெண்டக்காய் | 250 | 200 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 100 | 120 | 150 |
| பயற்றங்காய் | 400 | 400 | 320 | 400 |
| லீக்ஸ் | 200 | 160 | 180 | 200 |
| பீற்றூட் | 150 | 120 | 150 | 200 |
| கறிமிளகாய் | 400 | 300 | 500 | 500 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 250 | 300 |
| போஞ்சி | 550 | 500 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 280 | 150 | 280 | 180 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 80 | 150 |
| தேசிக்காய் | 1400 | 1400 | 1400 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60-90 | 70-100 |
| இராசவள்ளி | 400 | 500 | 500 | 500 |
| வெங்காயப்பூ | 400 | 350 | — | 480 |
| முள்ளங்கி | 150 | 120 | — | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 60 |
| வல்லாரை | 50 | 30 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 150 | — | 200 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2951

சானுயா





மேகலா




ரேணுயன்




கரிகாலன்




ரவிக்கா




தர்சன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 320





இருவரையும் தம் இரண்டு கண்களைப் போல் பராந்தக சோழர் ஆதரித்துச் சன்மானித்து வந்தார். இரண்டு கண்களில் எது உயர்வு, எது தாழ்வு என்று சொல்ல முடியாதுதானே? இப்போது அதிகாரம் செலுத்தி வந்த பழுவேட்டரையர்களின் பெரிய தந்தை பராந்தகருக்கு உதவி செய்தவர். அவர் பெயர் பழுவேட்டரையர் கண்டன் அமுதனார். ஈழத்தில் உயிர் துறந்த கொடும்பாளூர்ச் சிறிய வேளாளரின் தந்தைதான் (அதாவது வானதியின் பாட்டனார்) பராந்தக தேவருக்குத் துணை புரிந்த கொடும்பாளூர் சிற்றரசர்.

பராந்தக தேவரின் நாடகம் நடத்தியவர்கள் மேற்கூறிய இரண்டு சிற்றரசர்களுக்குள்ளே எவ்வித உயர்வு தாழ்வும் வேற்றுமையும் கற்பியாமல் மிக ஜாக்கிரதையாகவே ஒத்திகை செய்திருந்தார்கள். இருவருடைய வீரப் புகழும் நன்கு வெளியாகும்படி நடித்தார்கள். பராந்தக தேவர் அந்த இரு வீரர்களையும் சமமாகச் சன்மானித்ததைக் குறிப்பாக எடுத்துக் காட்டினார்கள்.

ஆனபோதிலும் நாடகம் பார்த்த சபையோர் அத்தகைய சமபாவத்தைக் கொள்ளவில்லையென்பது சீக்கிரத்திலேயே வெளியாயிற்று. அவர்களில் சிலர் கொடும்பாளூர்க் கட்சி என்றும், வேறு சிலர் பழுவூர் கட்சி என்றும் தெரிய வந்தது. கொடும்பாளூர் தலைவன் வீரச் செயல் புரிந்ததை நாடக மேடையில் காட்டியபோது சபையில் ஒரு பகுதியார் ஆரவாரம் செய்தார்கள். பழுவூர் வீரன் மேடைக்கு வந்ததும் இன்னும் சிலர் ஆரவாரித்தார்கள். முதலில் இந்தப் போட்டி சிறிய அளவில் இருந்தது வரவரப் பெரிதாகி வளர்ந்தது. நாடகத்தின் நடு நடுவே "நாவலோழு நாவல்!" என்னும் சபையோரின் கோஷம் எழுந்து நாலு திசைகளிலும் எதிரொலியைக் கிளப்பியது.

"இந்த நாளில் உற்சாகத்தையும் ஆதரவையும் காட்டுவதற்கு ஜனங்கள் ஜயகோஷம் செய்வதுபோல் அக்காலத்தில் "நாவலோ நாவல்!" என்று சப்தமிடுவது வழக்கம்.)

சபையில் எழுந்த இந்தப் போட்டி கோஷங்கள் குந்தவை தேவிக்கு உற்சாகத்தை அளித்தன. கொடும்பாளூர்க் கட்சியின் கோஷம் வலுக்கும் போது பக்கத்திலிருந்த கொடும்பாளூர் இளவரசியைத் தூண்டி, "பார்த்தாயா, வானதி! உன் கட்சி இப்போது வலுத்து விட்டது!" என்பாள். கள்ளங்கபடமற்ற வானதியும் அதைக் குறித்துத் தன் மகிழ்ச்சியைப் புலப்படுத்துவாள். பழுவூர்க் கட்சியாரின் கோஷம் வலுக்கு போது இளைய பிராட்டி நந்தினியைப் பார்த்து, "ராணி! இப்போது உங்கள் கட்சி பலத்துவிட்டது!" என்பாள். ஆனால் இது நந்தினிக்கு உற்சாக மூட்டவில்லை என்பதை அவள் முகக்குறி புலப்படுத்தியது. இந்த மாதிரி ஒரு போட்டி ஏற்பட்டதும், அதிலே ஜனங்கள் பகிரங்கமாக ஈடுபட்டுக் கோஷமிடுவதும், இளைய பிராட்டி அதை மேலும் தூண்டி விட்டு வருவதும், அந்த அற்பச் சிறுமி வானதியையும், தன்னையும் ஒரு நிறையில் சமமாக வைத்துப் பரிகசிப்பதும் நந்தினியின் உள்ளக் கனலைப் பன்மடங்கு வளர்த்து வந்தது. கோபித்துக்கொண்டு எழுந்து போய் விடலாமா என்று பல தடவை தோன்றியது. அப்படிச் செய்தால் அந்தப் போட்டியைப் பிரமாதப்படுத்தித் தன் தோல்வியை ஒப்புக்கொண்டதாகும் என்று எண்ணிப் பழுவூர் ராணி பல்லைக் கடித்துக் கொண்டிருந்தாள்.

இதையெல்லாம் குந்தவை கவனித்து வந்தாள். நந்தினியின் மனோநிலையைக் கண்ணாடியில் பார்ப்பது போல் அவளுடைய முகத் தோற்றத்திலிருந்து தெரிந்து கொண்டு வந்தாள். ஆனால் வேறொரு விஷயம் இளைய பிராட்டிக்குத் தெரியாத மர்மமாயிருந்தது. போரில் பாண்டிய மன்னன் தோல்வியடைந்தது, அவன் இலங்கை மன்னனிடம் சென்று சரணாகதி அடைந்தது, இலங்கை மன்னனிடம் உதவி பெறாமல் மணிமகுடத்தையும், இரத்தின ஆரத்தையும் அங்கேயே விட்டுவிட்டுச் சேர நாட்டுக்கு ஓடியது முதலியவற்றை நாடகத்தில் காட்டிய போது சபையோர் அனைவருமே அளவிலா உற்சாகத்தைக் காட்டினார்கள். ஆனால் நந்தினியின் முகம் மட்டும் அப்போதெல்லாம் மிக்க மன வேதனையைப் பிரதிபலித்தது.

(தொடரும்...)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு
## யாழ். பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

### விலங்குகள் பற்றி வியப்பூட்டும் விடயங்கள்

- நாய்களுக்கு நிறங்களைப் பிரித்தறியத் தெரியாது.
- பொதுவாக நாய்களுக்கு இளஞ்சிவப்பு நிறத்தில் நாக்கு காணப்படும். எனினும் Chow chows எனும் நாய்வகைக்கு மட்டும் நீலம் - கறுப்பு நிறத்தில் நாக்கு காணப்படும்.
- சுறா மீன்கள் கடலில் தான் வாழும் காளைச் சுறா என்ற சுறா மட்டும் ஏரிகளிலும் நதிகளிலும் வாழும்.
- ராஜ நாகம் மட்டுமே, பாம்பு இனங்களில் தான் இடும் முட்டைகளுக்கு கூடு கட்டும்.
- உலகின் பெரிய பாம்பான அனகோண்டா முட்டை இடுவதற்குப் பதிலாக குட்டி ஈனும்.
- டல்மேஷியன் நாய்களின் சிறப்பே, அதன் உடம்பில் உள்ள புள்ளிகள் தான். ஆனால் பிறக்கும் போது தூய வெண்மை நிறமாக இருக்கும். பிறந்து 3 அல்லது 4 நாட்களின் பின்னரே புள்ளிகள் தோன்றும்.
- பின்னோக்கிப் பறக்கக்கூடிய ஒரே பறவை ஹம்மிங் பேர்ட் (humming bied)
- வாத்துக்களால் தூங்கிக் கொண்டே நீந்த முடியும்.

நா.சிவாஞ்சலி

## தேடும் விழிகள்

யாழ்.மாநகரிலே அமைந்துள்ளதாம்
அற்புதமான அறிவாலயமாம்
அனைவரையும் கவரும்படியான
ஏற்றத்திற்கான அவை அறிவையூட்டுமே

கல்லூரி கல்வியோடு பல்துறை தேடலையும்
கற்சிதமாக பெற்றுக் கொள்ளலாமே
நேரம் கிடைக்கும் நேரமெல்லாம்
நேராய் சென்று பெற்றிடுவோமே

பாடசாலை மாணவர் வரை பற்பலரும் விரும்புவது
படிக்க தேவையான ஏடுகளும் உண்டல்லவா
நாளாந்த செய்திகளுடன் தாங்கிவரும் தினத்தாழும்
திசையெங்கும் நடக்கும் நடப்புக்களை
படிக்கலாமே பலர் அறிந்திடுவாரே

நாம் வாழும் காலமதில் நல்லதொரு நூலகமாம்
நாமறிய சேவை தனை நாடு போற்றுமே
நல்லதொரு நிர்வாகி நின்று உன் சேவையால்
நாடறிய புகழ் சேர்க்கும் நல்தொரு நூலகமாம்

எஸ்.பி.தனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## பொலநறுவை யுகத்திற்குப்பின் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரை - பகுதி II

22



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இதனால் நேரடியாகவே லிஸ்ப்பனில் (Lisbon) இருந்த போர்த்துக்கலின் அரசனுக்குக் கடிதம் எழுதினார். தொடர்ந்து யாழ்ப்பாணத்தின் மீது படையெடுப்பதற்கான அனுமதி லிஸ்ப்பனில் (Lisbon) இருந்து கோவாவுக்கு அனுப்பப்பட்டது. எனினும் சவேரியாரின் விருப்பம் எளிதில் கைகூடிவிடவில்லை. தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுப்பதற்குச் சவேரியார் எடுத்துக் கொண்ட தீவிர முயற்சிகள் பற்றி குவைறோஸ் பாதிரியார் தனது நூலில் விபரமாகக் குறித்துள்ளார்.

### முதல் படையெடுப்பு முயற்சி

1543 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்துக்கு எதிரான முதலாவது போர்த்துகீசப் படையெடுப்பு முயற்சி நடந்ததாகத் தெரிகிறது. மார்ட்டின் அல்போன் சோதேசோசா என்னும் போத்துக்கீசப் படைத் தலைவனின் தலைமையில் வந்த கப்பல்கள் காற்றினால் திசைமாறி நெடுந்தீவை அடைந்தன. அவர்கள் அங்கே தங்கியிருந்த போது, அரசையிழந்த சங்கிலியால் ஏமாற்றப்பட்டதாகக் கருதப்படும் அவனது தமையனான பரநிருபசிங்கன், அங்கு சென்று சங்கிலியைப் பதவியிலிருந்து அகற்றித் தன்னை அரசனாக்கினால் அவர்களுடைய வணிக விருத்திக்கும், மத வளர்ச்சிக்கும் உதவுவதாக வாக்களித்து அவர்களது உதவியைக் கோரினான். அவ்வாறு செய்வதாக வாக்களித்து அவனிடம் இருந்து பெறுமதியான முத்துக்களைப் பெற்றுக் கொண்ட தளபதி, சங்கிலியுடனும் உடன்பாடு செய்து கொண்டு பெருந்தொகைப் பணம் பெற்றுக் கொண்டு திரும்பிவிட்டான்.

### உள்நாட்டுப் பிரச்சினைகள்

தென்னிலங்கையில் அரசுரிமைப் போட்டிகள் காரணமாக எதிரெதிராகப் போரிட்டுக் கொண்டவர்கள் தமது நலனுக்காக போத்துக்கீசரின் உதவியை நாடினர். இந்த நிலைமையைச் சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொண்ட போத்துக்கீசர், நாட்டிலே தமது செல்வாக்கைப் பலப்படுத்திக் கொண்டிருந்தனர். இந் நிகழ்வுகளால் தூண்டப் பெற்ற சிலர் யாழ்ப்பாண இராச்சியத்திலும் போத்துக்கீசரின் தலையீட்டைக் கொண்டுவர முயற்சி செய்தனர். முக்கியமாக, அவனது தமையனான பரநிருபசிங்கன் யாழ்ப்பாண இராச்சியத்தின் அரசுரிமையைத் தான் பெறுவதற்காகப் போத்துக்கீசரின் துணையை நாடினான். அத்துடன், மதம் மாறிக் கத்தோலிக்க மதத்தையும் தழுவிக் கொண்டான். எனினும், இவனுக்கு அரசுரிமையைப் பெற்றுக் கொடுக்கப் போத்துக்கீசரால் இயலவில்லை.

1751 ஆம் ஆண்டில் திருகோணமலையை ஆண்டு வந்த வன்னியன் இறந்தான். அவனுடைய வாரிசான இளவரசன் எட்டு வயதே நிரம்பிய சிறுவனாக இருந்ததால், இன்னொரு வன்னியர் தலைவன் ஆட்சியை நடத்தலானான். திருகோணமலை வன்னிமை யாழ்ப்பாண அரசுக்குக்கட்டுப்பட்டது என்பதால் சங்கிலி இப் பிரச்சினையில் தலையிட்டான். ஆனால், வன்னியர் தலைவன் இளவரசனையும் கூட்டிக் கொண்டு இந்தியாவுக்குச் சென்றான். அங்கே ஏற்கனவே கத்தோலிக்கராக மாறிய பரதவர்களின் உதவியால் போத்துக்கீசருடன் தொடர்பு கொண்டு தானும் கத்தோலிக்கனாக மாறிப் போத்துக்கீசரின் உதவியைக் கோரினான். தொடர்ந்து 1000 பரதவர்களைக் கொண்ட படையுடன் திருகோணமலையில் இறங்கினான். ஆனால், சங்கிலி இந்த நடவடிக்கைகளை முறியடித்தான். இளவரசன் மீண்டும் இந்தியாவுக்கே திரும்பினான். சங்கிலியை யாழ்ப்பாண ஆட்சியிலிருந்து இறக்கிவிட்டுத் திருகோணமலை இளவரசனையே யாழ்ப்பாண இராச்சியத்துக்கு மன்னனாக்கவும் போத்துக்கீசர் எண்ணியிருந்ததாகத் தெரிகிறது.

### நல்லூர் வீழ்ச்சி

1560 இல் கோவாவில் போர்த்துக்கேயப் பதிலாளுநராக (Viceroy) இருந்த கொன்ஸ்டன்டீ னோ த பிறகன்சா (Constantino de Braganca) என்பவன் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்து வந்தான். சிறப்பான போர் அனுபவம் கொண்டிருந்த போத்துக்கேயர் தலைநகரான நல்லூரை இலகுவாகக் கைப்பற்றினர். சங்கிலியன் தனது அரண்மனையை எரியூட்டிவிட்டு வன்னிப் பகுதிக்குப் பின் வாங்கினான். போத்துக்கேயப் படைகள் துரத்திச் சென்றும் அவனைப் பிடிக்க முடியாமல் அங்கே முகாமிட்டிருந்தனர். போத்துக்கேயப் படைகள் அப்போது வன்னிப் பகுதியிலும், நல்லூரிலும், கடலில் நின்ற கப்பலிலுமாக மூன்று பகுதிகளாகப் பிரிந்திருந்தனர். அரசனைப் பிடிப்பதற்காக அவனைத் தொடர்ந்து வன்னி சென்ற படைகள் நோயாலும், பசியாலும் பெரிதும் வருந்தினர். நல்லூரும் போத்துக்கேயருக்குப் பாதுகாப்பானதாக இல்லை.

### சங்கிலியனின் தந்திரம்

இந்நிலையைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட சங்கிலியன் போர்த்துக்கேயப் பதிலாளுநருக்குச் சமாதானத் தூது அனுப்பினான். சிக்கலான நிலைமையில் இருந்த ஆளுநர் சில நிபந்தனைகளுடன் அதற்கு உடன்பட்டான். போத்துக்கேயருக்குத் திறை செலுத்துவது உட்பட்ட இந்நிபந்தனைகளை நிறைவேற்றுவதை உறுதி செய்வதற்காக, இளவரசன் ஒருவனையும், வேறொரு அதிகாரியையும் போத்துக்கேயர் பிணையாக வைத்திருப்பதற்கும் அரசன் இணங்கினான். சங்கிலி நல்லூருக்குத் திரும்பினான். போத்துக்கேயர், அரசன் தருவதாக உடன்பட்ட தொகையைப் பெற்றுக் கொள்வதற்காகக் காத்திருந்தனர். அதனைக் கொடாமல் போக்குக் காட்டிய சங்கிலி போத்துக்கேயரைத் தந்திரமாகத் துரத்தி விடுவதிலேயே கண்ணாக இருந்தான். ஒரு நாள் அங்கேயிருந்த போத்துக்கேயருக்கு எதிராக ஒரே சமயத்தில் மக்கள் கிளர்ந்தனர். வெளியே சென்றிருந்தவர்கள் கொல்லப்பட்டனர். மற்றவர்கள் தங்கியிருந்த இடங்கள் முற்றுகைக்கு உள்ளாயின. போத்துக்கேயர் பெரும் சிரமத்தோடு தப்பியோடினர். எனினும், பிணையாகக் கொடுத்திருந்த இளவரசனையும், அதிகாரியையும் மீட்கும் சங்கிலியின் முயற்சி வெற்றி பெறவில்லை. அவர்களைப் போத்துகேயர் கோவாவுக்குக் கொண்டு சென்றனர்.

### சங்கிலியின் முடிவு

சங்கிலியனின் ஆட்சி எவ்வாறு முடிவுற்றது என்பதில் தெளிவில்லை. இவன் மக்களால் அகற்றப்பட்டதாகப் போத்துக்கேயப் பாதிரியாரான குவைறோஸ் குறிப்பிட்டுள்ளார். மக்கள் கலகம் செய்து சங்கிலியை அகற்றிவிட்டு அவனது மகனான புவிராஜா பண்டாரத்தை அரசனாக்கினர் என்றும், புவிராஜா பண்டாரம் ஆண்மையற்றவனாய் இருந்தமையால் சங்கிலியே ஆட்சியை நடத்தி வந்தான் எனவும் செ.இராசநாயகம் கூறுகிறார். இவரது கூற்றுப்படி சங்கிலி 1565 ஆம் ஆண்டு காலமானான்.

### புவிராஜ பண்டாரம் (1561 -1565)

புவிராஜா பண்டாரம் (இறப்பு 1591) யாழ்ப்பாண இராச்சியத்தை 1565 இல் அவரது தந்தை சங்கிலியின் மரணத்தின் போதும் அதற்குப் பின்னரும் குழப்பமான காலக்கட்டத்தில் ஆட்சி செய்தார். சங்கிலிக்கு எதிரான உள்ளூர் கிளர்ச்சியைத் தொடர்ந்து 1561 இல் அவர் மன்னரானார். பெயரளவிலான அரசர், சங்கிலி 1565 இல் இறக்கும் வரை அரியணைக்குப் பின்னால் உண்மையான அதிகாரத்தைப் பயன்படுத்தினார். சங்கிலியின் மரணத்திற்குப் பிறகு, புவிராஜ பண்டாரம் காசிநயினார் மற்றும் பெரிய பிள்ளையிடம் அதிகாரத்தை இழந்தார்.

### காசி நயினார் (1565 -1570)

காசிநயினார் என்பவன் யாழ்ப்பாணத்தில் போத்துக்கீசரின் ஆதிக்கம் தொடங்கிய 1560 களில் அந்நாட்டை ஆண்ட அரசன் ஆவான். சங்கிலி அரசனைத் தொடர்ந்து பட்டத்துக்கு வந்த புவிராஜ பண்டாரம் என்பவனை அகற்றிவிட்டு யாழ்ப்பாண அரசை இவன் கைப்பற்றிக் கொண்டான். இவன் யாழ்ப்பாணத்து அரச பதவிக்கு வாரிசு உரிமையற்றவன் என்பதனால், இவனை அகற்றுவதற்காக இவன் எதிராளிகள் சிலர், அக்காலத்தில் மன்னார்த்தீவைக் கைப்பற்றி ஆண்டு கொண்டிருந்த போத்துக்கீசரின் தளபதியான தொம் ஜெரமியோ டீ அசவீடோ என்பவனிடம் முறையிட்டனர். யாழ்ப்பாண அரசியலில் தலையிடுவதற்கு இதை ஒரு வாய்ப்பாகக் கருதிய தளபதி யாழ்ப்பாணத்துக்கு வந்து காசி நயினாரை அகற்றிவிட்டு இன்னொருவனை அரசனாக்கித் திரும்பினான். காசிநயினார் சிறையில் அடைக்கப்பட்டான். போத்துக்கீசத் தளபதி மன்னாருக்குத் திரும்பிய தும், காசிநயினாரின் ஆதரவாளர்கள் புதிய அரசனைக் கொன்று, காசிநயினாரைச் சிறை மீட்டதுடன் அவனை மீண்டும் பதவியில் அமர்த்தினர்.

இந் நிகழ்வைக் கேள்வியுற்ற போத்துக்கீசத் தளபதி சினம் கொண்டான். காசிநயினாரைச் சூழ்ச்சியால் கொல்ல எண்ணி, அவன் அரண்மனைப் பணியாள் ஒருவனுக்குக் கையூட்டுக் கொடுத்து அரசன் உண்ணும் உணவில் நஞ்சு கலந்து அவனைக் கொன்றான்.

### பெரிய பிள்ளை (1570-1572)

பெரியபிள்ளை பண்டாரம், செகராசசேகரன் என அரியணைப் பெயர் கொண்டவர்களில் எட்டாவது ஆரியச் சக்கரவர்த்தியுமாகிய, யாழ்ப்பாண அரசன் ஆவான். இவனைக் குறித்து மிகக்குறைவான தகவல்களே ஆய்வாளர்களுக்குக் கிடைத்துள்ளன. காசிநயினாரைக் சூழ்ச்சியால் கொன்றபின், மன்னாரில் இருந்த போர்த்துக்கீசத் தளபதியால் இவன் மன்னன் ஆக்கப்பட்டவன். ஜார்ஜ்தெமேலோ என்னும் அத்தளபதி 1570 ஆம் ஆண்டு வரையிலேயே பதவியில் இருந்தவன் என்பதால், பெரிய பிள்ளையின் ஆட்சி 1570 ஆம் ஆண்டுக்கு முன்னரே தொடங்கி விட்டது என்பது உறுதி. 1582 ஆம் ஆண்டில் புவிராஜபண்டாரம் என்பான் யாழ்ப்பாணத்தை ஆண்டது பற்றிய குறிப்புக்கள் வேறு மூலங்களில் காணப்படுவதால், பெரிய பிள்ளையின் ஆட்சி 1572 ஆம் ஆண்டுக்கு முன்னரே முடிந்து விட்டது என்பதும் தெரிகிறது.

இவை தவிர தற்காலத்தில் கிடைக்கும் போத்துக்கீசர் காலத்தகவல்களின் படி புவிராஜ பண்டாரத்தைத் தொடர்ந்து ஆட்சியில் இருந்த எதிர் மன்னசிங்கன் பெரிய பிள்ளையின் மகன் ஆவான் என்பதும் தெரிய வந்துள்ளது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன உறுதியும் அன்பும் நம்மிடமுள்ள பெரிய கவலைச் சுமையைப் போக்கக்கூடிய ஆற்றல் பெற்றவை.

~ எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## காசாவில் கொல்லப்படும் குழந்தைகள் ஈனச் செயல் கண்டும் இரங்காத நாடுகள்

எனக்கு முன் கடவுள் தோன்றி உனக்கு என்ன வரம் வேண்டும் கேள் என்றால், சுவாமி! எனக்கு பொன் வேண்டாம். பொருள் வேண்டாம். புகழ் வேண்டாம். ஆனால் என் இதயத்தைச் சதா சுட்டெரித்துக் கரியாக்குகின்ற கொடூரச் செயல்கள் நடக்கின்றன.

குறிப்பாக இஸ்ரேல் படைகள் காசா மீது குண்டு மழை பொழிந்து காசா மக்களைக் கொன்று குவிக்கின்றன.

அதிலும் நாளாந்தம் பலநூற்றுக்கணக்கான குழந்தைகள் கொல்லப்படுகின்றனர் என்ற செய்தியால், நிம்மதியான உறக்கத்தைத் தொலைத்துவிட்டேன்.

எனவே இறைவா! உன்னிடம் நான் கேட்கின்ற வரம் இதுதான்.

கொடூரமான முறையில் போர் நடத்துகின்றவர்களையும் அந்தக் கொடும் போருக்கு ஆதரவு கொடுக்கின்ற நாடுகளின் ஆட்சித் தலைமைகளையும் கொன்று குவிக்கின்ற பெரும் வரத்தை நீ எனக்குத் தர வேண்டும்.

நல்லோரைக் காக்கவும் தீயோரை அழிக்கவும் யுகம் தோறும் அவதாரம் எடுப்பேன் என்று கீதையில் செய்த உபதேசம் நடக்கும் வரை காத்திருந்தால், அந்தோ! காசா மக்கள் முழுமையாகக் கொன்றொழிக்கப்பட்டு விடுவர்.

அதோ! யுத்த விமானங்கள் காசா மீது குண்டுகளை வீசி மக்களைக் கொன்று குவிக்கின்றன.

குழந்தைகள், பெண்கள் துடிதுடித்துப் பலியாகின்றனர்.

இந்த மோசமான மனிதப் பேரழிவுக்கு ஆதரவு வழங்குகின்ற நாடுகள் பொதுமக்களைக் கொல்ல வேண்டாமென்று இஸ்ரேலுக்கு கூறுவதுபோல நாடகம் நடத்துகின்றன.

ஆகையால்தான் உன்னிடம் வரம் கேட்கிறேன். கொடியவர்களைக் கொல்வதற்கு வரம் தா.

கொடியவர்களுக்கு ஆதரவு கொடுக்கும் கயவர்களின் சண்டித்தனத்தை வெட்டிச் சரிக்க ஆச்சரியம் நிறைந்த சக்தியைத்தா.

பலஸ்தீனர்களை அழிக்கும் நோக்கில் காசா மீது போர் தொடுத்துள்ள இஸ்ரேலை ஐ.நா பொதுச் செயலாளர் கண்டித்த போதிலும் காரியம் எதுவும் ஆகவில்லை. காலம் இன்னும் கடக்குமேயாயின் மூன்றாம் உலகப் போருக்கும் அது வழிவகுக்கலாம்.

ஆகையால் மனிதக் குருதி குடிக்கும் அரக்கர்களை அழித்தொழிக்க ஆன ஆயுதம் தா.

கூடவே துறவு பூண்டு காவி உடுத்து சதா இறைநாமத்தை உச்சரிக்க வென்று வெளிக்கிட்டவர்களில் சிலர் வெட்டி விழுத்துவேன் என்று உரைக்கும்போது அவர் நாக்கை அரிந்து எறிய வரம் தா இறைவா. ஈனர்களை இனி வாழவிடுவது முறை யன்று

ஆகையால் உன்னிடம் வேண்டினேன். வரம் தந்தருள்க. தர்மம் நிலைத்தற் பொருட்டே.

# இலங்கையில் சீன ஆராய்ச்சிக் கப்பல் பூதாகரப்படுத்தும் இந்திய ஊடகங்கள்

## சீன ஊடகம் சாடல்

(பீஜிங்)

இலங்கைக்கு சீன கப்பல் சென்றுள்ளதை இந்திய ஊடகங்கள் பெரிதுபடுத்துகின்றன என நிபுணர்கள் தெரிவித்துள்ளதாக சீன கம்யுனிஸ்ட் கட்சியின் குளோபல் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சீனாவின் குளோபல் டைம்ஸ் மேலும் தெரிவித்துள்ளதாவது.

சீனாவின் புவி இயற்பியல் ஆராய்ச்சிக் கப்பல் இலங்கையில் தரித்து நிற்பதை தொடர்ந்து இந்து சமுத்திரத்தில் சீனாவின் சட்டபூர்வ விஞ்ஞான நடவடிக்கையை அரசியல்மயப்படுத்துவதை கண்டித்துள்ள ஆய்வாளர்கள் இவ்வாறான கருத்துக்கள் இந்தியாவின் பிராந்திய மூலோபாயத்திற்கு உதவும் நோக்கத்திலானவை எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

செப்டம்பரில் குவாங்சோவிலிருந்து புறப்பட்ட அந்த கப்பல் 13 நிறுவனங்களை சேர்ந்த விஞ்ஞானிகள் நிபுணர்கள் உள்ளனர். அவர்கள் 80 நாட்களில் 28 கடல் கடந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்வார்கள் என சின்குவா தெரிவித்துள்ளது.

வெப்பமண்டல கிழக்கு இந்திய பெருங்கடலில் மாறும் செயல்முறைகள் பொருள் சுழற்சி மற்றும் உயிர் புவியியல் ஆகியவற்றிற்கு இடையிலான தொடர்பு போன்ற விடயங்கள் குறித்த இந்த ஆராய்ச்சியின் போது கவனம் செலுத்தப்படும்.

எனினும் இந்துஸ்தான் டைம்சின் செய்தியொன்று இந்த கப்பல் இரண்டு நோக்கங்களை கொண்டது இந்த கப்பல் கடல்சார் ஆராய்ச்சிக்கு மாத்திரமில்லை இந்து சமுத்திரத்தில் எதிர்காலத்தில் சீன நீர்மூழ்கிகளை பயன்படுத்துவதற்கான கடல் அடி ஆராய்ச்சிக்கும் இந்த பயன்படும் என தெரிவித்துள்ளது.

இந்தியாவின் கரிசனைகளையும் மீறி கப்பல் கொழும்புத்துறை முகத்தில் தரித்து நிற்பதாக இந்துஸ்தான் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

சீனாவின் புவிஇயற்பியல் ஆய்வுக்கப்பல் இந்திய பெருங்கடலில் அறிவியல் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது எனினும் சில இந்திய ஊடகங்கள் இந்த கப்பலை இராணுவ நோக்கத்துடன் தொடர்புபடுத்துகின்றன என சிங்குவா பல்கலைகழகத்தின் தேசிய மூலோபாய நிறுவனத்தின் ஆராய்ச்சி பிரிவின் இயக்குநர் குறிப்பிட்டுள்ளார். சீனாவின் சர்வதேச கௌரவத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தவே இந்திய ஊடகங்கள் இவ்வாறு செயற்படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# வரவு - செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்துக் காட்டுங்கள்-சஜித் சவால்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விமர்சிக்கும் நாமல் ராஜபக்ஷ முடிந்தால் வரவு-செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்து காட்டுமாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச சவால் விடுத்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நாட்டை அழித்து வங்குரோத்து நிலைக்கு அழைத்து சென்ற ராஜபக்ஷ குடும்பத்தினர் தமது பாதுகாப்புக்காக ஜனாதிபதி ஒருவரை நியமித்துக் கொண்டனர்.

அந்த ஜனாதிபதி மீது அந்த குடும்பத்தின் நாமல் ராஜபக்ஷ அமைச்சரவை மறுசீரமைப்பால் கோபத்தில் உள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு செயற்படும் அரச குடும்பம், சுகாதார அமைச்சர் மீதான நம்பிக்கையில்லா தீர்மான வாக்கெடுப்பின் போதுகூட நாடு குறித்து சிந்திக்காமல் தம்மைப் பற்றி சிந்தித்தே செயற்பட்டது.

எனவே, இவர்களின் நாடகத்தை இனியும் நம்புவதற்கு நாட்டு மக்கள் தயாரில்லை.

இவர்கள் எவ்வாறு நாட்டை அகல பாதாளத்திற்கு இட்டுச் சென்றார்கள் என்பது முழு நாட்டிற்கும் தெரியும்.

ஜனாதிபதியை விமர்சிப்பது போல் நடித்தாலும் பாதீட்டை ஆதரித்தே வாக்களிப்பார்கள்.

முடியுமானால் வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்துக் காட்டுமாறு சவால் விடுக்கின்றேன்" என தெரிவித்துள்ளார். (நி-6)

# சந்திரகிரகணத்தை இலங்கையிலும் பார்வையிடலாம்

## ஆதர்சி.கிளார்க் மையம் தெரிவிப்பு

(கொழும்பு)

பகுதி சந்திர கிரகணத்தை பார்வையிடும் சந்தர்ப்பம் இலங்கையருக்கு கிடைத்துள்ளது.

இச்சந்திர கிரணகம் இன்று 28 இரவு தொடக்கம் நாளை காலை வரை சுமார் 4 மணித்தியாலங்கள் 25 நிமிடங்கள் தென்படவுள்ளதாக மொரட்டுவை ஆர்தர்சி கிளார்க் மையம் தெரிவித்துள்ளது.

இதன்பிரகாரம் மேற்த பசுபிக் பெருங்கடல், அவுஸ் திரேலியா, ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா, கிழக்கு தென் அமெரிக்கா, வடகிழக்கு வட அமெரிக்கா, அட்லாண்டிக் பெருங்கடல், இந்தியப் பெருங்கடல், தென் பசுபிக் பெருங்கடல் பகுதிகளில் சந்திர கிரகணம் தெரியும். மேலும் நிலவின் பிரகாசம் மற்றும் நிறத்தில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்றும் மையம் தெரிவித்துள்ளது.

பகுதி சந்திரகிரகணம் இலங்கை நேரப்படி இன்று 23.31 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

அத்துடன் பகுதி சந்திர கிரகணம் நாளை அதிகாலை 1.5 மணிக்கும், அதிகபட்ச சந்திர கிரகணம் அதிகாலை 1.44 மணிக்கு 5 வினாடிகளிலும் தெரியும்.

பகுதி சந்திர கிரகணத்தின் முடிவு 29 அதிகாலை 2.22 மணிக்கு நிகழும் என்றும் பெனும்பிரல் சந்திர கிரகணம் அதிகால்லை 3.56 25 வினாடிகளுக்கு நிகழும் என்றும் ஆர்தர்சி கிளார்க் மையம் தெரிவித்துள்ளது. (நி-6)

# முழுநிலா கலைவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பண்பாட்டுப் பேரவையினால் நடத்தப்படும் முழுநிலா கலைவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபரும் பண்பாட்டு பேரவைத் தலைவரான அ.சிவபாலசுந்தரன் தலைமையில் இடம்பெறும்.

குறித்த நிகழ்வில் இசைச்சங்கமம், விவாத அரங்கு மற்றும் விழிப்புணர்வு நாடகம் ஆகிய கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நேரங்களில் வாகனங்களின் நெரிசலை குறைக்க புதிய நடைமுறை

## கிளி.ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் தீர்மானம்

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலை நேரங்களில் மாணவர்களின் பாதுகாப்பு கருதி கனரக வாகனங்களின் போக்குவரத்து நடைமுறையில் மாற்றம் செய்ய ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.**



வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றபோதே குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பு கருதி பாடசாலை நாட்களில் காலை 7 மணி முதல் 8 மணி வரையும், பிற்பகல் 1 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையும் முறிகண்டியில் இருந்து கிளிநொச்சி நகர எல்லை உட்பட பரந்தன் சந்தி வரை டிப்பர் உள்ளிட்ட கனரக வாகனங்களின் போக்குவரத்தை நிறுத்துவது என மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில் மேற்கூறிய நேர எல்லைக்குள் ஏனைய வாகனங்களின் வேக வரம்பை மணிக்கு 40 கி.மீ ஆக குறைக்கவும் முடிவு செய்யப்பட்டதுடன், இந்த விதிகளை மீறும் சாரதிகள் மீது கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. (நி-6)

# சுமணதேரர் கருத்து தொடர்பில் பொலிஸ்மா அதிபருக்கு கடிதம்

## சுமந்திரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)



வன்முறை மற்றும் இன மற்றும் மத வெறுப்புணர்வைத் தூண்டுவதை நோக்கமாகக் கொண்டு அம்பிட்டிய சுமண தேரரால் அண்மையில் வெளியிடப்பட்ட கருத்து தொடர்பாக பொலிஸ் மா அதிபருக்கு பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் கடிதமொன்றை எழுதி அனுப்பி வைத்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள அக் கடிதத்தில், கடந்த சில நாட்களாக மங்களாராமய அம்பிட்டிய சுமண தேரரின் பகிரங்கமான அறிக்கைகள் ஊடகங்களில் மிக அதிக அளவில் விளம்பரப்படுத்தப்பட்டதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

அம்பிட்டிய சுமண தேரர், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த எமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனையும், நாட்டின் தென்பகுதியில் வாழும் அனைத்துத் தமிழர்களையும் துண்டு துண்டாக வெட்டிவிடுவேன் என்று வெளிப்படையாக மிரட்டிச் சென்றுள்ளார்.

இது அப்பட்டமாக 2007 ஆம் ஆண்டின் ICCPR சட்டத்தின் 56 ஆம் பிரிவு 3(1) மற்றும் (2) இன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். ஏன் பொலிஸார் குறித்த தேரருக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை என கேள்வி எழுப்பியிருந்ததோடு குறித்த கடிதத்தின் பிரதி சபாநாயகருக்கும், ஊடகங்களுக்கும் பிரதியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# வழிப்பறி கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்ட இருவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள்களை திருடி, திருடிய மோட்டார் சைக்கிள்களில் சென்று வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்டு வந்த கும்பலை சேர்ந்த இருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், கொடிகாமம், மட்டுவில், சுன்னாகம் உள்ளிட்ட பகுதிகளில் அண்மைக்காலமாக மோட்டார் சைக்கிளில் செல்லும் வழிப்பறி கொள்ளையர்கள் வீதியில் செல்வோரிடம் சங்கிலி, தாலிக்கொடி என்பவற்றை அறுத்து வருவதாக பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

அது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், அதனை தொடர்ந்து வழிப்பறி கொள்ளைகள் இடம்பெற்ற பகுதிகளில் காணப்பட்ட கண்காணிப்பு கமராக்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டதை அடுத்து இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளை விற்க உதவியவர்கள், அதனை வாங்கியவர்கள் உள்ளிட்டவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-6)

# சட்டவிரோத மணல் அகழ்வை தடுக்க அரச அதிகாரிகளுக்கு பணிப்பு

(கிளிநொச்சி)



கிளிநொச்சியில் இடம்பெற்றுவரும் சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபடுவோருக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு தரப்பினருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று வடமாகண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தில் மணல் கடத்தல் மற்றும் வனங்களில் மரங்களை வெட்டுதல் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளை உடனடியாக தடுத்து நிறுத்து மாறும் பணிப்புரை விடுக்கப்பட்டது.

கிளிநொச்சியில் கர்மாநாடு, கல்லாறு, கிளாலி, முரசுமோட்டை, உமையாள்புரம், அக்கராயன்குளம் மற்றும் குஞ்சுப்பரந்தன் உட்பட பல பிரதேசங்களில் சட்டவிரோத மணல் கடத்தல் இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அரச உயர் அதிகாரிகள் சிலர் டிப்பர் வாகனத்தில் மணல் கட்டத்தில் ஈடுபடுவது குறித்தும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)



வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சினால் இதுவரை காலமும் வெளியீடு செய்யப்பட்ட புத்தகங்களின் கண்காட்சி கடந்த இரண்டு தினங்களாக முல்லை.மாவட்ட செயலக மணி மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்: சதீஸ்)

# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கக் கூட்டத்தில் கைகலப்பு

## 7பேர் கைது

(குருமன்காடு)

வவுனியாவில் இடம்பெற்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க கூட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் தாய்மாரிடையே ஏற்பட்ட கைகலப்பில் 7 பேர் வவுனியா பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா நகரசபை உள்ளக மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் வவுனியா மாவட்டத்திற்கான புதிய நிர்வாகத் தெரிவு ஒன்றை மேற்கொள்வதற்காக கூட்டத்தினை ஒழுங்கு செய்திருந்தனர்.

இந்நிலையில் கூட்டத்திற்கு வருகை தந்த வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க உறுப்பினர்கள் மற்றும் வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்திற்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியது.

இதனையடுத்து வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் பொலிசாரின் தொலைபேசிக்கு அழைப்பு எடுத்து தாக்குதல் தொடர்பில் முறையிட்டனர்.

குறித்த முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட வவுனியா பொலிஸார் இரு பகுதியினரும் இணக்கப்பாட்டுக்கு வராது ஒருவர் மீது ஒருவர் மாறி மாறி குற்றச் சாட்டுக்களை முன்வைத்த நிலையில் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய 7 பேரை பொலிஸாரால் கைது செய்துள்ளனர். (நி-6-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சாரம்...

பாய்ச்சுவதற்கு நீர்ப்பம்பிக்காக மின்சார இணைப்பினை ஏற்படுத்த முயற்சித்த வேளையிலேயே குறித்த நபர் மீது மின்சாரம் தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் இராமநாதக்குருக்கள் ஸ்ரீஸ்கந்தராஜா குருக்கள் (வயது-69) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மல்லாவி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,100)

## தையிட்டி...

பாட்டில் இருந்த யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை, தையிட்டி பகுதியில் மக்களது காணிகளை சுவீகரித்து சட்ட விரோத திஸ்ஸ விகாரையானது அமைக்கப்பட்டது.

இந்த விகாரைக்கு காணியின் உரிமையாளர்கள் உட்பட பொதுமக்கள் மற்றும் தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தின.

இந்நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியால் தொடர்ச்சியாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில் குறித்த விகாரையில் போயா தினமான இன்று வழிபாடுகள் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் நேற்றையதினம் போராட்டம் ஆரம்பமாகியது.

இந்த போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-7,104)

## கல்லுண்டாயில்...

போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

காரின் சாரதி நேற்றைய தினம் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-7,104)

## சீன முன்னாள்...

ருக்கு திடீரென்று மாரடைப்பு ஏற்பட்டு உயிர் பிரிந்தது.

பொருளாதார வல்லுநரான இவர், பல சீர்திருத்த நடவடிக்கைகளை எடுத்தார். சீனாவின் தலைமைப் பொருளாதார அதிகாரியாக பத்து ஆண்டுகள் பணியாற்றினார்.

1955ஆம் ஆண்டு அன்ய் மாகாணத்தில் பிறந்த லீ கெகியாங், ஒரு கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளராகத் தொடங்கி அரசியலில் நுழைந்தார். அவர் பீக்கிங் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றார். கம்யூனிஸ்ட் இளைஞர் கழகத்தில் ஈடுபட்டார். அவர் 1994 இல் பொருளாதாரத்தில் முனைவர் பட்டம் பெற்றார்.

அவர் மாகாண பதவிகள் மற்றும் அமைச்சகங்களில் பணியாற்றிய பிறகு 2007இல் கட்சியின் மத்திய குழுவில் சேர்ந்தார். சீன ஜனாதிபதி ஜி ஜின் பிங்கின் நம்பிக்கைக்குரிய தலைவர்களில் ஒருவராக லீ கெகியாங் இருந்தார்.(ம-7)

## டைனமெட்...

மன்னார் பிரதான தபாலக வீதியில் வைத்து ஒரு தொகுதி ஜெனட்னைட் (டைனமெட்) குச்சிகளுடன் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் ஒருவர் மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் இராணுவ புலனாய்வு பிரிவின் தகவல்களுக்கு அமைய மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்திரபாலவின் பணிப் புரைக்கு அமைவாக செயற்பட்ட மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் குறித்த நபரை கைது செய்ததோடு ஜெனட்னைட் (டைனமெட்) குச்சிகளையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் கல்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடையவர் எனவும் அவரிடம் இருந்து 315 ஜெனட்னைட் (டைனமெட்) குச்சிகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசாரணையின் பின் மீட்கப்பட்ட ஜெனட்னைட் (டைனமெட்) குச்சிகளோடு கைது செய்யப்பட்ட நபர் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளார். (ம-7,315)

## மின் கட்டண...

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போயா தினமான இன்று இரவு 7 மணி முதல் 7.30 வரை அரை மணி நேரம் மின் விளக்குகளை அணைக்குமாறும்,

இதன்மூலம் அரசாங்கத்துக்கு தமது எதிர்ப்பைத் தெரிவிக்குமாறும் மக்களிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி புதன்கிழமை கொழும்பு - குருநாகல் பஹ வீதியில், திவுலப்பிட்டி பிரதான பேருந்து நிலையத்திற்கு முன்பாக காலை 8 மணிக்கு மின் பாவனையாளர் சங்கம் மற்றும் வெகுஜன அமைப்புக்கள் இணைந்து எதிர்ப்புப் பேரணியை ஆரம்பிக்கவுள்ளன என்ற தகவலையும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த பேரணி திவுலப்பிட்டியில் இருந்து கொழும்பில் அமைந்திருக்கும் பிளவர் வீதியில் உள்ள மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சுவரை செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். (ம-7)

## மருத்துவபீட...

நேற்று வெள்ளிக்கிழமை வைத்திய பீட மாணவ செயற்பாட்டு குழுவினால் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டிருந்தது.

குறித்த ஆர்ப்பாட்டத்தால் கொழும்பு தாமரை வீதி முழுமையாக மூடப்பட்டதுடன், அதனை அண்மித்த பகுதிகளில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## உயர்...

கப்பட்டது. பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், நீதிமன்றில் கோரிக்கை ஒன்றை விடுத்து, இந்த வழக்கு தொடர்பான ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க கால அவகாசம் கோரினார்.

இதன்படி, எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் குறித்த ஆட்சேபனைகளை தாக்கல் செய்யுமாறு பிரதிவாதிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதனையடுத்து, மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி லக்ஷான் டயஸ் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், மனுவை பரிசீலிக்க நவம்பர் 23ஆம் திகதிக்கு அழைப்பு விடுக்க உத்தரவிட்டது.

கனிஷ்க சந்தருவன் உள்ளிட்ட மூன்று உயர்தர பரீட்சை பரீட்சார்த்திகளால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. உயர்தரப் பரீட்சையின் அளவுகோல்களின் படி, தங்களுக்கு 495 நாட்கள் படிப்புக் காலம் உள்ளது என்று மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆனால், நாட்டில் நிலவிய மின்வெட்டு உள்ளிட்ட பல்வேறு மோசமான காரணங்களால், இந்த ஆண்டு 300 நாட்களாக படிப்பு காலம் வரையறுக்கப்பட்டுள்ளதாக மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அனைத்து பாடத்திட்டங்களையும் முடிக்க முடியவில்லை என சுட்டிக்காட்டியுள்ள மனுதாரர்கள், அந்த நிபந்தனையின் கீழ் உயர்தரப் பரீட்சை நடத்தினால், தங்களுக்கு பாரிய அநீதி ஏற்பட வாய்ப்புள்ளதாக குறிப்பிட்டுள்ளனர். இதன்படி, குறித்த பரீட்சையை மேலும் ஒத்திவைப்பதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு மனுதாரர்கள் உயர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக கல்வி அமைச்சர், கல்வி அமைச்சின் செயலாளர், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். (ம-7)


கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3522
சீட்டிழுப்பு திகதி 27.10.2023
Y 09 12 59 66
Y 77568
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.10.27
சீட்டிழுப்பு இலக்கம் - 1310
G 08 15 46 66 G
Double Chance 19998

லக்கி 7
திகதி 27.10.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0106
L7 இலக்கம் 1 3
வெற்றி இலக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள் 5 9 8 7 7 8

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.10.27
சீட்டிழுப்பு இலக்கம் 589
துலாம் 07 44 49 62 துலாம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 27/10/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1628
V 01 13 43 53 55
28293

மஹஜன சம்பத
திகதி 2023/10/27
சீட்டிழுப்பு இலக்கம் 5280
J 1 0 0 8 2 9
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2254
வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.10.27
தினம் வெள்ளிக்கிழமை
03 16 47 64 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,009,076.00
DLB

சனிதா
திகதி 2023.10.27 வெற்றி வாரம் 4415 வர்ணம் செம்மஞ்சள்
10 19 34 68 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,001,648.00
92088
DLB

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 394
சீட்டிழுப்பு திகதி 2023.10.27
வெற்றி இலக்கங்கள் 03 22 25
பச்சை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,140,760/-
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3966
வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.10.27
தினம் வெள்ளிக்கிழமை
01 15 20 48
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,414,171.20
637235 479
DLB

கப்ருக
திகதி 27.10.2023 வெற்றி வாரம் 1430
W 30 45 59 63 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 157,588,444.20
847259 695
DLB
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

அதி கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2080
சீட்டிழுப்பு திகதி : 2023.10.27
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,863,008/-
13 22 62 65 D
163235
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்து விநியோகத்துக்கு 5.6 பில்லியன் ஒதுக்கீடு

மருந்து விநியோகத்திற்கான அத்தியாவசிய கொடுப்பனவுகளுக்காக 5.6 பில்லியன் ரூபா திறைசேரியில் இருந்து ஒதுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2 மாதங்களுக்கு மருந்து விநியோகத்திற்கான மேலதிக ஏற்பாடுகளை பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவைக்கு மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.


## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378, 076 097 3127

## IELTS

Academic | General | UKVI

#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 18)

நேரடி , zoom வகுப்புக்களாக

A1 IELTS Life Skills
திருமணம் செய்து UK செல்வோருக்கானது

B1 Skilled Worker Visa
மூலம் வெளிநாடு செல்வோருக்கானது

DMI , British Council இன் (C-7506)
அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

புதிய பிரிவு ஆரம்பம் 1/11/2023-WED, 4/11/2023-SAT -9 am or 3 pm

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்

DIPLOMA IN ENGLISH

SPOKEN ENGLISH

DMI COMPUTER EDUCATION 0777 17 35 17

DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி 0777 24 07 07 021 222 4403

| | | | | |
|---|---|---|---|---|
| | சாவகச்சேரி | | சிறுப்பிட்டி | |
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |
| 0777577333 | 0777227074 | 0776032300 | 0761354503 | 0776398096 |

## CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா
செல்வதற்குரிய ஆலோசனைகள்
மற்றும் Online விண்ணப்பங்கள்
விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7500)
0777-068-777
49A.சப்பல் லேன், யாழ்ப்பாணம்

V2 TRAVELS

## அமெரிக்க அதிஸ்ட விசா

இன்னும் 06 நாட்களில் நிறைவடைகின்றன

இன்னும் 06 நாட்களே உள்ளன.

2024 நீங்களும் அமெரிக்காவில்...

இந்த வருடம் A/L ...

0768226244

55000 இலவச விசாக்கள்

எனது நண்பன் V2 Travels விளம்பரம் பார்த்து என்னையும் பதியுமாறு சொல்லியிருக்காவிட்டால் இன்று அமெரிக்காவில் கை நிறைய சம்பளத்துடன் நிரந்தர விசா வாய்ப்பு கிடைத்து இருக்காது.

V2 Travels க்கும் நட்புக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்

கரிகாலன்

V2 Travels

V2 TRAVELS

## VILLAGE HOTEL

பஸ் சேவை

JAFFNA EXPRESS

AIRPORT PICK UP DROP SERVICE

வடமராட்சி - யாழ்ப்பாணம் - கொழும்பு
வடமராட்சி - கொடிகாமம் - கொழும்பு

2800/= (17484)

T.P:077 544 8503

## முகாமையாளர் தேவை

எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றிற்கு முகாமையாளர் (Manager) தேவை. (17559)

தொடர்புகளுக்கு

077 066 9467

## காலநடைகள் வளர்ப்போருக்கு

இந்தியா மற்றும் சீனாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட பால் கறக்கும் மெசின்(Milking Machine), பால் சேகரிக்கும் கொள்கலன்(Milk Can) 5 லீற்றரில் இருந்து 40 லீற்றர் வரையான அளவுகளில் சில்வர் (SS 304) மற்றும் அலுமினியத்தினாலானவை எம்மிடம் நியாயமான விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.



ஆர்க் என்ரபிறைசஸ்
102, K.K.S, வீதி,யாழ்ப்பாணம். 021 222 3155
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9, வீதி, பரந்தன் சந்தி. 021 228 2020
எழுதுமட்டுவாள், A9 வீதி. 070 191 3571
Hot Line : 071 535 7799/ 071 973 9917 (17586)

## குத்தகைக்கு தேவை

வான்கள் நீண்ட நாள் குத்தகைக்கு தனியார் கம்பனிக்குத் தேவை. தகுந்த வெறுமதி வழங்கப்படும். (17591)

077 971 5376

## பணிப் பெண் தேவை

யாழ்.நகரில் சிறிய குடும்பம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப் பெண் தேவை. மாதாந்த சம்பளம் 64000 வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு

075 988 1000
075 498 5400
077 937 0000 (17587)

## விற்பனைக்கு

Lion பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. (17582)

071 649 2654

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு ஸ்ரேசன் வீதியில் (காளி கோவிலுக்கும் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திற்கும் இடையில்) 1 1/2 பரப்புக்களாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு. (17593)

077 728 6061

## A/L PHYSICS

Group Classess...

யாழ்.ஆனைப்பந்தி சந்தி அருகில்

**2025 Mechanics**
$B_1$ : காலை 6.00
$B_2$ : காலை 8.00
$B_3$ : மாலை 6.00

**2024 Light**
$B_1$ : காலை 6.00
$B_2$ : மாலை 6.00

T.U.Jiinthu

வகுப்புக்கள் பல குழுக்களாக நடைபெறுகின்றமையால் மாணவர்கள் பொருத்தமான நேரசூசி உடைய குழுவை தெரிவு செய்து கற்க முடியும்.

076 603 4895

Zoom ஊடான வகுப்புக்கள்

2025 செவ், வெள்ளி 7.30 - 9.00pm

2024 திங்கள் 7.30 - 9.00 pm
செவ், வெள்ளி 9.00 - 10.00 pm (17592)

## SB TRAVELS

மிகச்சிறந்த குறைந்த விலையில் விமான ரிக்கெட் உங்கள் SB TRAVELS இல்.....

| | |
|---|---|
| கனடா - RT LKR 394,000 | |
| லண்டன் - RT LKR 285,000 | |
| பலாலி & சென்னை - RT LKR 63,800 | |
| கொழும்பு & சென்னை - RT LKR 58,500 | |
| டோகா - OW LKR 59,600 | |
| இத்தாலி - OW LKR 119,000 | |

அத்துடன் அமெரிக்காவில் குடியேறும் உங்கள் கனவை நிறைவேற்றும் அரிய வாய்ப்பிற்கான குலுக்கல் விசா விண்ணப்பம் செய்து தரப்படும். இச் சந்தர்ப்பம் 07th Nov 2023 வரை மட்டுமே.

Only 1000/- to Apply

Condition Apply

அது மட்டுமன்றி மலேசியா, இந்தியா, டுபாய்,(B)பாங்கொக் போன்ற நாடுகளிற்கான விசாக்கள் பெற்றுத் தரப்படும்.

Hotline - 075 555 9932
Jaffna Office - 075 559 9708, 075 559 9709
Colombo 15 - 077 108 3482, 077 108 3483
Colombo 13 - 076 691 1089

No 198, Kasthuriyar Road,Jaffna
SB TRAVELS
Email : SBTravelsjaffna@gmail.com (C-7507)

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | |
|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 265/= |
| 400 g நெஸ்டமோல்ட் | - 800/= ~~(830/=)~~ |
| 1 Kg தீட்டல் பச்சை | - 175/= |
| 1 Kg கோதுமை மா | - 180/= |
| 1 Kg Prima கோதுமை மா | - 187/= |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 287/= |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 435/= |
| 1 Kg றவை | - 289/= |
| 400 g அங்கர் பால்மா | - 1040/= ~~(1080/=)~~ |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 360/= ~~(430/=)~~ |
| 70 g Baby Soap | - 108/= ~~(145/=)~~ |
| 330 g டிகிரி மாரி பிஸ்கட் | - 262/= ~~(330/=)~~ |
| 750 ml New VSP நல்லெண்ணை | - 1300/= ~~(1400/=)~~ |
| 1 Kg மல்லி | - 372/= |

1040/=



~~1080/-~~ (17595)

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

## YOUNG MEN'S CHRISTIAN ASSOCIATION- JAFFNA

### JOB OPPORTUNITY

**Position:** Liaison Officer (Programme Co-ordinator)

Jaffna YMCA is inviting applications for the role of Liaison Officer (Programme Co-ordinator).

**Qualifications:**

- Diploma in a relevant field preferred, with a minimum of two years of experience in charitable or non-governmental organizations.
- Alternatively, G.C.E. Advanced Level with four years of experience in similar organizations.
- Strong communication skills in Tamil and English, with proficiency in MS Office.
- Ability to work with diverse teams and grassroots-level communities.

**Compensation:**

- Salary: Rs.25,150.00
- Cost of living Allowance: Rs.7,800.00
- Additional Benefits: Medical Reimbursement and staff loan (Conditions applicable)
- Preferred Age: 22 – 40

Interested candidates are requested to submit their applications (CV) to the General Secretary, 109 Kandy Road, Jaffna, on or before 15th November 2023. Ensure to include your contact telephone number and the names of two non-relative referees.

YMCA Jaffna is a non-profit Christian organization committed to making a positive impact. For further clarifications 021 222 2499

General Secretary (C-7502)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org